உ

சிவமயம்.

தமிழன்.

ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

"தவஞ்செய்வார் தங்கருமம் செய்வார்"
'எண்ணித்துணிக கருமம்'

"எவ்வ துறைவ துலக முலகத்தோ-
டவ்வ துறைவ தறிவு."

C. N. அனந்தராமைய சாஸ்திரி M. A., பண்டிதர் S. முத்துசுவாமிப் பிள்ளை, பத்திராசிரியர்கள்.

தொகுதி V. } 1093 மார்கழி, திருவனந்தபுரம்: JANUARY 1917. { பகுதி 11.

பொருள் அடக்கம்.

விஷயம்.			பக்கம்.
1. பிரபஞ்சவிதி	...	...	201
2. கம்பன்	...	...	205
3. ஔரங்கசீபும் மஹாராஷ்டிரரும்		...	212
4. பூந்தோட்டம்	...	...	219
5. பற்பல குறிப்புகள்	...	...	220

சந்தா விவரம்

இந்தியா, இலங்கை, இரங்கூன்	ரூ.	2
வெளிநாடுகளுக்கு	ரூ.	3

குறிப்பு:—சந்தாத்தொகை எப்பொழுதும் முன்னதாகவே செலுத்தப்படவேண்டும்.

THE "TAMILIAN"

A Monthly Anglo-Tamil Journal.

FOR

the Educated and the Masses, Women and Children

Annual Subscription Rs. 2

Strictly payable in advance.

SHORT STORIES: a speciality.

The best Medium for advertisement.

Advertisement rates per month.

Full page or 2 columns	Rs.	5—0—0
Half page or 1 column	„	3—0—0
Quarter page or ½ column	„	2—0—0

Contract rates on application.

All literary communications, books for review etc, should be addressed to Mr. C. N. Ananta Ramaiya Sastri M. A. Editor, The "Tamilian," Trivandrum; all orders, remittances, advertisements etc., to

Messrs. *NAGASUBRAHMANYA RAO BROS.*,

Publishers, Trivandrum.

பிரபஞ்சவிதி.

ஸ்ரீமாந் T. V. அருணாசலம் பிள்ளையவர்கள்.

———:0:———

வஸந்தகாலத்தில் இன்பகரமான ஒரு காலை வேளை ஆதவன் காந்தியுடன் பிரகாசித்துக்கொண்டிருந்தான். குளிர்ச்சியும் வெப்பமும் அல்லாத நடு அவஸ்தையில் காற்று மந்தமாக வீசிக்கொண்டிருந்தது. இந்நற்பொழுதில் உழைக்குந் தேனீ ஒன்று தன் கூட்டைவிட்டுப் புறப்பட்டுத் தேன் மலர்களை நாடிச் சென்றது. செல்லவும் ஒரு அழகிய பூந்தோட்டத்திற்புகுந்து அங்குள்ள பூக்களின் உள்ளும் புறமுமாக மனமெகிழ்ச்சியுடன் பறந்து, தன்னாற் சுமக்கக் கூடிய அளவு மகரந்தப்பொடியைச் சேர்த்துத் திரட்டி அலுப்புற்று 'வீட்டுக்குத் திரும்புவோம்' என்று எண்ணிற்று. அது மறுயாத்திரை புறப்பட்டுப் போனபோது ஒரு தனிகன் வீட்டில், திறந்து கிடந்த பல கணிவழியாய் எதிர்ச்சையாய்ப் பறக்க நேர்ந்தது. அன்று அத்தனவானது மகளுடைய கல்யாணதினமானதால், வீட்டிற்குள் பெருவிருந்து ஒன்று நடந்து கொண்டிருந்தது. அங்கு கூச்சலும் அமளியும் காசு கொடுத்தா வாங்கவேண்டும்? விருந்தினர் இட்ட இரைச்சலைக்கேட்டு ஈ நடுக்கிப்போயிற்று. ஆனாலும் அது இலையில் மீந்துகிடந்த சேலம் மாம்பழத்துண்டுகளில் ஒன்றை உருசிபார்க்க முயன்றது. அப்பொழுது "ஓ, அதோ ஒரு தேனீ; அதை நான் பிடிப்பேன்" என்று ஒரு பிள்ளை எக்களிப்புடன் சொல்வதை அது கேட்டது. கேட்கவும் குப்பென எழும்பிச்சென்றது. அந்தோ பாவம்! வெளியே போகிறோம் என்று நினைத்த ஈ சாளரத்தின் கண்ணாடிச் சில்லொன்றிற் சென்று மோதியது. அகஸ்மாத்தாய்க் கொண்ட அந்த அடி அதை மிகவும் வருத்தப்படுத்திற்று. வெளிச்செல்லப் பல முறையும் மார்க்கம் தேடிப் பயனுறாது, சோர்வுற்று, தான் இழந்த தேகவன்மையையும், மனத்திடனையும் திரும்பிப் பெறுமாறு, கண்ணாடிச் சில்லின் மேலும் கீழுமாக ஊர்ந்துகொண்டிருந்தது. அப்பொழுது அதைக் கூர்மையாய் நோக்கிக்கொண்டு நின்ற இரண்டு பிள்ளைகளின் மெல்லிய குரலோசை அதன் கவனத்தைக் கவர்ந்தது.

அப்பிள்ளைகளுக்குள் நடந்த சம்பாஷணை பின் வருமாறு:—

சுந்தரேசன்:—"தங்காய், இது உழைக்குந் தேனீ. அதன் தொடைகளுக்கடியில் மகரந்தப்பைகள் இருக்கின்றன பார்த்தாயா?—'ஏழைப் பிராணி! அது இதுவரைக்கும் என்ன சுறுசுறுப்பாய் இருந்திருக்கின்றது!"

சுலோசனை: "மகரந்தப்பொடியையும், தேனையும் அது தானாகவா தேடிக்கொள்கிறது, அண்ணா?"

சுந்தரேசன்: "ஆம் அவற்றை அது பூக்களிலிருந்து எடுத்துக்கொள்கிறது. சுலோசனா! நீ அதற்குள் மறந்து விட்டாயோ? நேற்றுத் தானே பார்த்தோம், நம்முடைய தோட்டத்தில், அவரைப் பூவில் தேனீ வந்திருந்ததை. ஒவ்வொரு பூவாய்ப்போய், பூவின் இதழைத் தாழ்த்திக்கொண்டு அதன் மேல் உட்கார்ந்து, தேனை உறிஞ்சிற்றல்லவா? ஈயின் கருநிறமும் புஷ்பத்தின் ஊதாநிறமும் பார்க்க அழகாயிருந்தனவன்றோ? அது இன்று தேன் திரட்டுவதையும் எனக்குப் பார்க்க முடியாமற் போயிற்றே. தேன் கூட்டுவது மட்டுமல்ல அதினுடைய வேலை. கூடுகட்டுவதும், மற்ற வேலைகளில் கிட்டத்தட்ட எல்லாவற்றையும் செய்வதும் அதைப் பொறுத்தது. அது ஒரு உழைக்கும் தேனீ, பாவம் அதென்ன செய்யும்! அது எல்லார்க்கும் கடையது."

சுலோசனை: "அண்ணா, உழைக்குந் தேனீ என்றால் என்ன? அதை ஏன் 'எல்லார்க்கும் கடையது' என்று சொல்கிறாய்?"

சுந்தரேசன்: "பிறருக்குழைத்து தங்களுக்கு உழைத்துக்கொள்ளாதவர்களை யெல்லாம் கடையானவர்கள் என்று மாமா அடிக்கடி சொல்வதை நீ கேட்டிருக்கவில்லையா? இந்த ஈ செய்வதும் அதுவே. கூட்டிலுள் ஒரு ராணி ஈ இருக்கின்றது. அது ஓரிடத்திலிருந்து மற்ற ஈக்களுக்கு வேலையிட்டுக் கொண்டும் குஞ்சுகளை பரிபாலித்துக் கொண்டுமிருக்கிறது. அதற்குத் தொண்டுசெய்ய, ஏராளமான ஈக்கள் காத்துக்கொண்டிருக்கின்றன. சோம்பேறி ஈக்களும் உண்டு. இவைகள் அல்லாமலும் இதோ இந்த ஈயைப்போல உழைக்கும் ஈக்க

ளுமிருக்கின்றன. அவைகள் மற்ற ஈக்களுக்குப் பணிவிடைக்காரர்கள். மாமா இதை அறிந்தார்களானால் நகைப்பார்களே!"

சுலோசனை: "ஏன்? மாமாவுக்குத் தேனீக்களைப் பற்றி ஒன்றும் தெரியாதா?"

சுந்தரேசன்: "ஏது, தெரியாதென்றே நினைக்கிறேன். இந்த விஷயங்களெல்லாம் நான் அறிந்து கொண்டது நம்முடைய தோட்டக்காரன் சுப்புவிடமிருந்து. மேலும் தேனீக்களுக்கு ராணியில்லாமற் நாட்கழிக்கமுடியாது என்று மாமா அறிந்திருப்பார்களானால் அவைகளைப் பற்றிப் பேசாமலும் ஏளனம் செய்யாமலும ஒருபோதும் இருக்கமாட்டார்கள். உலகத்தில் அரசர்களும் ராணிமாரும் இருப்பது இயற்கைக்கு விரோதம் என்று மாமா சொல்வதை நான் நேற்றுக் கேட்டேன். ஏன் விரோதம் என்றால், இயற்கை ஒரு மனிதனை ராஜாவாகவும் மற்றொருவனைத் தோட்டியாகவும் செய்வதில்லை."

சுலோசனை: "இந்தத் தத்வங்களையெல்லாம் உணர ஈக்களுக்குப் புத்தியில்லையே."

சுந்தரேசன்: "அது உண்மை. சுப்பு என்னிடம் சொன்னதை வேலைக்கார ஈக்கள் அறிந்திருக்குமானால் அவைகளுக்கு எவ்வளவு கோபம் உண்டாகுமென்பதை நீ நினைத்து பார்."

சுலோசனை: "அவன் உன்னிடம் என்ன சொன்னான்?"

சுந்தரேசன்: "வேலைக்கார ஈயும், ராணி ஈயும் பிறக்கிறபோது ஒரே தன்மையுடையனவாயிருக்கின்றனவென்றும், அவைகளுக்குக் கொடுக்கிற ஆகாரமும், அவைகள் வசிக்கும் இடமும் தான் இவ்வேற்றுமைக்குக் காரணம் என்றும் சொன்னான். இந்தப் பக்குவங்கள் செவிலி ஈக்களுக்கு நன்றாய்த்தெரியும். அவைகள் சில குஞ்சுகளுக்கு ஒருவித உணவும், இருக்க அறையும், இன்னும் சிலவற்றிற்கு வேறொரு மாதிரி உணவும் அறையும் கொடுக்கின்றன. ஆகவே சில ராணிகளாயும், வேறு சில உழைக்கும் ஈக்களாயும் மாறி விடுகின்றன. மாமா சொல்லுவது உண்மைதான். இயற்கை எல்லோரையும் ஒருப்போல உண்டுபண்ணுகிறது. ....பார். சாப்பாடு முடிந்தாய்விட்டது. எல்லோரும் போகிறார்கள், நாமும் போவோம்.

சுலோசனை: நில், போய்விடாதே. நான் இந்தத் தேனியை எடுத்து வெளியிற் கொண்டுவிட்டு வரட்டும்" என்றுகூறி ஒரு லேசான கைக்குட்டையினால் எடுத்து "அட, பாவமே! உனக்கு, உன்னை வளர்த்தவர்கள் சரியான உணவும், தங்க சரியான இடமும் தந்திருப்பார்களானால் நீயும் ஒரு ராணியாயிருந்திருப்பாயே. (ஏளனம் செய்யும் குரலில்) இப்பொழுதிருக்கிற மட்டுக்கும், பிரியசிநேகிதா, நீ உன்னுடைய வாணாள் முழுதும் தேனும் மெழுகும் உண்டு பண்ணிக் கழியவேண்டியதுதான். உனக்கு நற்காலம் பிறப்பதாக!" என்று ஆகாயத்தில் விட்டுவிட்டாள்.

மாலை மிக வனப்புடையதாயிருந்தது. சூரியன் குடதிசையை நண்ணிவிட்டனன். ஆனாலும் அவன் பொற்கிரணங்கள் பூமியில் விழுந்துகொண்டிருந்தன. பூக்களின் நறுமணம் காற்றிற் கலந்தது. முதியோரும் இளையோரும் ஒருங்கே ஆனந்தமாயிருக்கும் இவ்வினிய வேளையில், தேனீக்கு, வானத்தில் ஒரு பெரிய கார்மேகம் மூடியிருந்ததுபோல் தோற்றிற்று. உண்மையில் இந்த மேகம் அல்லது இருள் அதன் மனதிலேயே இருந்தது. காரணம் அதற்கு மனத்திருப்தியில்லாமையே. அது ராணி ஈயின் அதிகாரத்துக்கு உட்படமாட்டேன் என்று எதிர்த்தது. தன்னை வேலைக்கார ஈயாகச் செய்யும்படி வளர்த்த பாதகர்களை நொந்தது.

கடைசியாக, அது தான் காலையில் மனப்பூரிப்புடன் விட்டுவந்த கூட்டை அடைந்தது. கூட்டிற்குள் கோபாவேசத்துடனும், பரபரப்புடனும் பாய்ந்து சென்றது. சென்று, தான் சுமந்துவந்த அரும்பாரத்தைக் கீழிறக்கி உலகத்திலுள்ள பிராணிகள் எல்லாவற்றிலும் நானே கடையானவன்" என்று சொல்லிப் பெருமூச்சு எறிந்தது.

அதன் பக்கத்தில் வேலை செய்து கொண்டிருந்த, வயது முதிர்ந்ததும் அதன் பந்துவும் ஆன மற்றொரு ஈ அந்நெட்டுயிர்ப்பைக் கேட்டு "ஏனப்பா, காரியம் என்

னா? நீ என்ன செய்தாய்? விஷமுள்ள பூக்கள் ஏதேனும் தின்றுவிட்டாயா? அல்லது துஷ்டகுணமுள்ள தேன்—விட்டில் நம்முடைய அறைகளில் வந்து முட்டையிட்டிருக்கிறது என்று அறிந்தாயோ? உன் வியாகூலத்துக்குக் காரணம்?" என்று வினவிற்று.

"நீ சொன்னது இரண்டுமில்லை" என்று பிரயாணி ஈ வாய்ப்பதற்றத்துடன் சொல்லிற்று. "நான் நெடுந்தூரம் சஞ்சாரம் செய்து, என்னைப்பற்றி இதற்குமுன் நான் அறியாத எத்தனையோ விஷயங்களை அறிந்து வந்திருக்கிறேன். நாம் எல்லோரும் ஒரு கடையான இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று நான் இப்பொழுது உணர்ந்துகொண்டேன்."

முதுஈ:—"உன்னுடைய அனுபவ சித்தாந்தத்துக்கு மாறாக அதை உனக்குச் சொல்லிவைத்தது எந்தப் பிராணி? என்னிடம் தயவுசெய்து தெரிவிப்பாயோ?

பிரயாணிஈ.—"நான் ஒரு உண்மையை அறிந்தேன். அவ்வளவுதான். அதை யெனக்குக் கற்பித்தது யாராயினு மிருக்கட்டுமே. அதனாலென்ன!" என்று எரிச்சலோடு விடைகொடுத்தது.

முதுஈ:—"நியாயம், நீ சொன்னது. ஆனால் ஏதோ ஒரு புத்தியில்லாத பிராணி உன்னிடம் 'நீ கடையானவன்' என்று சொன்னமாத்திரத்தில் அதன் அபிப்பிராயத்தை நீ சரிவைத்துவிடக் கூடாது. பிறனொருவன் உன்னிடம் வந்து சொல்வதற்குமுன், ஒரு கடையானவன் என்று உன்னை நீ நினைத்திருந்தாய்? அது இல்லையே—நீ இங்ஙனம் கூறுவது மதியீனம். ஆனால் உன்னோடு நான் அதிகமாக ஒன்றும் பேசமாட்டேன்" என்று சொல்லி, சந்தோஷத்துடன் பாடிக்கொண்டு தன் வேலையைச் செய்யப் போயிற்று.

பிரயாணம் செய்து நூதன விஷயங்களை அறிந்து வந்த சிறு ஈயை முதுஈ ஏளனம் செய்வதால், அது தன் அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ளும் என்பது முடியாமற் போயிற்று. பிரயாணி ஈ, தன் வயதுடைய அநேகம் சிநேகிதர்களைக் கூப்பிட்டு ஒரு கூட்டம் கூட்டி அவர்களுக்கு, தான் அறிந்ததை யெல்லாம் உபதேசம் செய்துவைத்தது. அதன் வாய்ப்பிறப்பைக்கேட்ட மற்ற ஈக்களெல்லாம் பெரும் அதிசயமுற்றன. அநேகமாய், எல்லாம் மனக்கிலேசம் கொண்டன. சபையோர் மனதில் இவ்வளவு கிளர்ச்சியுண்டாக்க நம்மால் முடிந்ததே என்று அது சந்தோஷப்பட்டு, நிமிஷத்துக்கு நிமிஷம் அதன் மடமை பெருகிக்கொண்டுவர, ராணிமார் இந்த உலகத்தில் இருக்கிறதே நியாயமல்ல' என்ற விஷயத்தைப்பற்றி சொல்வன்மையோடும், மிகச் சாதுரியமாகவும் ஒரு நீண்ட பிரசங்கம் செய்தது.

பிரயாணி ஈ பேசிமுடித்ததும் முதலாவது நிசப்தமும், பின்னர் கோபத்தைக் குறிப்பித்த சில ரீங்கார சப்தங்களும், அதன்பின் ஆலோசனைகளும் உண்டாயின. தங்களுக்கு ராணியால் நேர்ந்த தீங்கை நீக்குவதற்கு அவைகளுக்கு முதன் முதலாகத் தோற்றிய உபாயங்களெல்லாம் குழப்பமாகவே யிருந்தனவென்பதை ஒளிக்கமுடியாது. சில, "நாம் எல்லோரும் ராணிகளாய்விட்டால் நமக்கு எவ்வளவு ஆனந்தமாயிருக்கலாம்" என்றன. அதைக்கேட்டு, முதிய ஈ தான் புதிதாகக் கட்டிக்கொண்டிருந்த அறையின் மூலைவழியாக தன்னுடைய தலையை விட்டு உற்றுப்பார்த்து "எல்லோரும் பல்லக்கு ஏறினால் பல்லக்குச் சுமப்பது யார்? எல்லோரும் ராணி ஈக்கள் ஆகுங்கள், ஆனால் ராணிக்கு யார் வேலைக்காரர்களாயிருப்பார்கள்?" என்று, வினவியது.

கலகம் செய்த ஈக்களெல்லாம் முதிய ஈயை 'பேதை' என்று இகழ்ந்து பேசின. ஏனென்றால் அவைகள், கொடுங்கோலாச் செலுத்திவந்த ராணியும், அறைகளில் வளர்ந்துவந்த அவள் பிள்ளைகளுமாகிய இவைகள் உள்ளமட்டும், தங்களுக்கு வேலைக்காரர்கள் கிடையாப் பொருளாகமாட்டார்கள் என்று நினைத்தன. "அவைகள் இறந்துவிட்டாலோ?" என்றது முதுஈ. "ஹும்! ஹும்!" என்று முழங்கின கலகக்கார ஈக்கள். அதன்பின் முதுஈ ஒன்றும் சொல்லவில்லை. வேறொரு ஈ "ராணியே வேண்டாம். நாம் எல்லோரும் உழைக்கும் ஈக்களாயிருப்போம்" என்று சொன்னது. திரும்பவும் முதுஈ வந்து "அதனால் பயனென்ன? நாம் இப்பொழுதே உழைப்பாளிகளாய் இருக்கவில்லையா?" என்று கோபித்தது. மற்ற ஈக்கள் அதன்மேல் விழுந்து அடிக்கிறமாதிரி ஒரு இரைச்சல் உண்டாக்க அது தன்னுடைய வேலையைப் பார்க்கப்போய்விட்டது.

(தொடரும்.)

கம்பன்.

ஸ்ரீமாந் வ. வே. ஸுப்ரஹ்மண்யய்யரவர்கள்.

கம்பனுடைய சரித்திரத்தைப் பற்றியும் காலத்தைப்பற்றியும் நம் காலம் வரையில் எட்டியிருக்கிற ஒன்றோடொன்று முரணுகிற பல கர்ணபரம்பரைகளுக்கிடையில் இன்ன இன்ன அம்சங்களை நிச்சந்தேகமாக நம்பலாம் என்று நிர்ணயிப்பது மிகவும் கடினமான காரியம். இருப்பினும், அந்த மகா கவியின் சரித்திரத்தில் உண்மையாக இருக்கலாம் என்று கொள்ளக்கூடிய அம்சங்கள் பின் வருபவைதாம் என்று ஒருவாறு நிச்சயித்து எழுதுகிறோம்.

கம்பன் ஜாதியில் உவச்சன், அதாவது காளிகோயில் பூசாரி. அவன் தகப்பன் பெயர் ஆதித்தன். அவன் பிறந்தது திருவழுந்தூர். காலத்தில் அவன் திருவெண்ணெய் நல்லூரில் சடையன் என்னும் ஒரு வள்ளலை அடுத்து, அவனால் மதித்தற்கரிய நன்மைகள் பெற்று, அவனுக்கு உயிர்த் துணைவனாக வாழ்ந்து வந்தான்.

கம்பன் தனது கவித்திறமையை முதலில் காட்டியது வேளாளரைப் பாடிய ஏரெழுபது என்னும் நூலிலாம். சரஸ்வதியந்தாதி, மும்மணிக்கோவை என்ற நூல்களும் கம்பனால் பாடப்பட்டதாகச் சொல்லப்படுகின்றன. ஆனால் அவை எக்காலத்தில் பாடப்பட்டன என்று சொல்லமுடியவில்லை. இப்பொழுது இறந்து போய்விட்டாலும் இன்னும் எத்தனையோ பாட்டுகளும் நூல்களும் கம்பன் பாடியிருக்கவேண்டியது என்பதில் ஐயமில்லை. ஏனெனில் அவனுடைய வாக்கின் செழுமையைப் பார்த்துவிட்டுத்தான் சடையப்ப வள்ளல் அவனை ராமாயணத்தைத் தமிழில் பெருங்காப்பியமாகப் பாடவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கவேண்டும்.

ராமாயணத்தைப் பாடப் பல வருஷங்களாகியிருக்கவேண்டும் என்பதில் சந்தேகமில்லை. பிறகு அங்கேயுள்ள வித்துவான்களுக்கு அதைப் படித்துக்காட்டி அவர்களுடைய சாற்றுக் கவிகளைப் பெற்றுக்கொண்டு கடைசியில் அவன் ஸ்ரீரங்கம் சென்று ஸ்ரீமந் நாதமுனிகளும் மற்றுமுள்ள மகான்களும் பண்டிதர்களும் நிறைந்த சபையினில் தன் ராமாயணத்தை ஆதியோடந்தமாக வாசித்து அரங்கேற்றிக் கவிச்சக்ரவர்த்தி எனப் பட்டப்பெயரும் பெற்றான். அரங்கேற்றுவதற்கு முந்தி நம்மாழ்வார்மீது ஒரு அந்தாதி பாடிவைத்தான் என்றும் சொல்லப்படுகிறது.

கம்பனுடைய கவித்திறமை *சோழராஜனுக்குத் தெரிந்ததுமுதல் அவனை அவன் தனது சபைக்கு வரவழைத்துக்கொண்டு அவனுக்கு ராஜோபசார தேவோபசாரங்களும் செய்துவந்தானாம்.

கம்பனுக்கு அம்பிகாபதி என்று ஒருமகனிருந்தான். அவனும் ஒரு கவி. அவன் சோழன் மகளை விழைந்தானென்றும் அதற்காகச் சோழன் அவனைச் சிரச்சேதம் செய்தானென்றும் சொல்லப்படுகிறது. அம்பிகாபதியைத் தவிர கம்பனுக்குக் காவேரி என்று ஒரு மகளும் இருந்தாளாம். அவளைச் சோழன் மகன் விரும்பி வரம்புகடக்க முயன்றானும். அப்பொழுது அவள் தன் கற்பைக் காப்பதற்கு வேறு மார்க்கமில்லாமல் வீட்டு முற்றத்திலுள்ள கம்பங்குழியிலிறங்கித் தன்னுயிரை மாய்த்துக்கொண்டு விட்டாளாம்.

இந்தக்கதைகள் உண்மையாயிருக்கும் பக்ஷத்தில் கம்பனுக்கும் சோழனுக்கும் மனஸ்தாபம் உண்டாவதற்கு வேறு காரணங்கள் வேண்டாம். ஆனால் காரணம் எதுவாக இருந்தாலும், கம்பன் சோழன்மீது கோபித்துக்கொண்டு, ஏகாங்கியாய்ப் புறப்பட்டு, தேசதேசாந்தரங்களெல்லாம் சுற்றினான் என்று எல்லாக் கர்ணபரம்பரைகளும் ஒத்துக் கூறுகின்றன. அந்த ஊர்களிலெல்லாம் கம்பன் தனது ஊர் பெயர் முதலானது ஒன்றும் சொல்லிக்கொள்ளாமல் சாதாரண மனிதன்போலவே பிரயாணம் செய்தான். கடைசியில அவன் ஒரு பலவானன அரசன் சபையில் போய்ச் சேர்ந்து அங்கே அஞ்ஞாதவாசமிருந்து கொண்டே தனது ராமாயணத்தைப் பிரசங்கித்துவரும் நாளில் அவனை அவ்வரசன் கம்பன் என்று தெரிந்துகொண்டதும் அவனிடத்துப் பேரன்பும் மரியாதையும்காட்டி-

அவனுக்கு யானை குதிரை பரிவாராதிகள் பரிசாகத் தந்து, அவனை ராஜபோகத்தில் வைத்துவிட்டான். 1

இப்படிச் சில வருஷங்கள் செல்லக் கடைசியில் கம்பனுக்குத் தன் சுதேசத்தைப் பார்க்கவேண்டு மென்கிற ஆசையுண்டாகி அதன்பேரில் அவன் அவ் வேற்றரசனுடைய அனுமதி பெற்றுக்கொண்டு சோழ நாடுவந்து சேர்ந்தான். உள்ளூற இல்லாமற் போனு லும் மேலுக்காகிலும் கம்பனுக்கும் சோழனுக்கும் சமாதானம் ஏற்பட்டது. கமபன் பழையபடி அரண் மனைக்குச் செல்லுவதும் சோழன் கம்பனுக்கு முன் போலவே மரியாதைகள் செய்வதும் சில காலத்துக்கு நடந்துவந்தது. ஆனால் சோழன் மாத்திரம் மனஸ் தாபத்தை மறக்கவில்லை. ஒரு கர்ணபரம்பரை நம் புவதாக இருந்தால், சோழன் கம்பன்பேரில் கறு வைத்துக்கொண்டே வந்து ஒரு நாள் அவன் அரண் மனைக்கு வரும் நேரம் பார்த்து அவனுக்கு எதிரே ஒரு புலியை அவிழ்த்து விடும்படி கட்டளையிட்டா னும். ஆனால் புலியை நோக்கிக் கம்பன் ஒரு கவி பாட, புலி அஞ்சி அடங்கிவிட்டதாம். அது கண்டு சோழன் கோபமூண்டு தன் கையிலிருந்த வில்லில் ஒரு அம்பைக் கோர்த்து கம்பனுடைய மார்பில் தைக் கும்படி விட்டுக் கம்பனைக் கொன்றுவிட்டானும்.

கம்பனுடைய சரித்திரத்தைச் சுற்றி வளர்ந்திருக் கிற கதைகளை எண்ணித் தொலையாது. அவைகளை யெல்லாம் இங்கே எடுத்துச்சொல்லுவதில் பயனில்லை.

ஆனல் கம்பன் காலத்தை நிர்ணயம் செய்வதற்கு அவ னைப்பற்றி வந்திருக்கிற கர்ணபரம்பரைகளைச் சற்று ஆழமாக நோக்குவது அவசியமாகும்.

கர்ணபரம்பரையாக வருகிற விஷயங்களை விசாரி யாமல் அப்படியே ஏற்றுக்கொள்ளுவது சரியன்று. ஆனல் கர்ணபரம்பரையாக வருகிற காரணம்பற்றியே அவ்விஷயங்களைத் தவறென்று கொள்ளுவதும் பிழை யாகும். ஐதீகம் ஒருவாறிருக்கும்போது பண்டிதர் அதை உண்மையெனவே நினைத்துக்கொண்டு அதற் குச் சரித்திரரீதியான ஆதாரங்கள் தேடவேண்டும், அப்படித் தேடிக்கொண்டு வருகையில் ஐதீகத்தைப் பொய்ப்படுத்தக் கூடிய சாக்ஷியங்கள் தென்பட்டால் அச்சாக்ஷியங்களைப் பல தடவை சோதித்தும் ஐதீகத் தோடு பொருத்தியும் பார்த்து, அவை நிச்சந்தேகமா னவையாயும் ஐதீகத்தோடு முற்றிலும் முரணுபவையா யும் இருந்தால் மாத்திரம் ஐதீகத்தைத் தவறு என்று கொள்ளவேண்டும். புதிதாகக் கண்டுபிடித்திருக்கும் ஆதாரங்களின் விஷயத்தில் கொஞ்சம் சந்தேகமிருந் தாலும் சரி, ஐதீகத்தினுள்ளேயே அந்தர்கதமான அசாத்தியதை இல்லாதவரையில் ஐதீகத்தைத்தான் ஒப்புக்கொள்ளவேண்டியது.

ஆனல் கர்ணபரம்பரைகள் ஒரே குணத்தவை யாக இருப்பதில்லை. ஒன்றுக்கொன்று பொருந்தாத பல சங்கதிகள் ஒரே கர்ணபரம்பரையில் ஒரே சரித் திரமாகச் சொல்லப்படுவதை நாம் பார்க்கிறோம். இந் தச் சந்தர்ப்பங்களில் உண்மையைக் கட்டுக் கதையி னின்றும் பிரித்தெடுத்தல் கடினமாகத்தானிருக்கும். ஆனல் இதைப் பார்த்துவிட்டு ஒரு ஐதீகத்தில் சொல் லப்படுகிற சகல விஷயங்களையும் சகட்டுக்கு ஒரே ரீதி யாகத் தவறென்றே கொண்டுவிடுவது சரியாகாது. ஐதீகத்தில் சொல்லப்பட்டுவருகிற எந்த எந்த விஷ யங்கள் கதையாகச் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்று ஆராய்ந்து உண்மைகளைத் தனியாகப் பிரித் தெடுத்து அவைகளை மாத்திரம் ஸ்தாபித்து, மற்றவை களை வெறும் கதைகளென்று நிரூபித்துக் காட்டி உல கத்தில் உண்மை பரவும்படி செய்யவேண்டியதுதான் பண்டிதர்களின் கடமையாகும்.

இப்பொழுது நாம் கூறிமுடித்த விசாரணை வழி யை அனுசரித்துக் கம்பனுடைய காலத்தை நிர்ணயம் செய்ய முயலலாம்.

---

1 இந்த அரசன் பெயர் பிரதாபருத்திரன் என்று தமிழ் நாவலர் சரிதை கூறும். ஆனல் இன்னொரு கர்ணபரம்பரை கம்பன் அஞ்ஞாதவாசமிருந்தது சேரஅரசன் அவையில் என்று சொல்லுகிறது. தன்னுடைய கவித் திறமையை அறிய முடி யாத ஆந்திர அரசன் சபைக்குக் கம்பன் சென்றான் என்று கூறும் காணபரம்பரையை ஒப்புக்கொள்ளுவது நமக்குக் கடி னமாக இருக்கிறது. மூன்று இடங்களில் கம்பன் தெலுங்கு மொழிகளைப் பிரயோகித்திருப்பதினின்று கம்பன் தெலுங்கி லும் பண்டிதனுயிருந்திருக்க வேண்டும் என்று நிர்மானித்து ஸ்ரீமான் ரா. ராகவய்யங்கார் இதற்குப் பொருத்தம் கூறுகிறார். இவை பாடப் பிழைகளல்ல, உண்மையில் தெலுங்குமொழி களே என்று ஏற்பட்டாலும் கூடக் கம்பனுக்குத்தான் சிறிது தெலுங்கும் தெரியும் என்று ஏற்படுமே ஒழிய, பிரதாபருத்தி ரனுக்கும் அவன் அவையத்தாருக்கும் தமிழிலக்கியங்களைக் கேட்டு அனுபவிக்கும் சக்தி இருந்தது என்று ஏற்படாது. ஆகையால் கம்பன் சேரஅரசனிடம் சென்றான் என்று கொள் ளுவதுதான் நியாயம் என்று தோன்றுகிறது.

எண்ணிய சகாத்தம் எண்ணூற்றேழின்மேல், சடையன் வா
நண்ணிய வெண்ணெய்நல்லூர் தன்னிலே கம்பநாடன்[ழ்வு
பண்ணிய இராமகாதை, பங்குனி அத்தநாளில்,
கண்ணிய அரங்கர் முன்னே கவி அரங்கு எற்றினனே,

என்று கர்ணபரம்பரை சொல்லுகிறது. ஆகவே மிகப் பலமான காரணங்களிருந்தாலொழிய, கம்பன் ராமாயணத்தை அரங்கேற்றியது சாலிவாகன சகம் அ௦எ-ம் ஆண்டு என்பதைத் தள்ளிவிட நமக்குப் பாத்தியமில்லை. துவாபரயுகம் அல்லது வேறு யுகாந்தரங்கள் என்று மிகவும் தூரமான காலமாகச் சொல்லப்பட்டிருந்தால், கம்பனுடைய காலம் தெரியாததாலோ, அல்லது அவனுக்குப் பெரும் பழமையைக் கற்பித்து அதனால் அவனுக்கு அபாரமான மகிமையை உண்டாக்கலாம் என்கிற தவறான எண்ணத்தாலோ ஜனங்கள் இந்தப்பிரகாரம் கூறியிருக்கிறார்கள் என்று கொள்ளலாம். ஆனால் சகம் அ௦எ மிகப் பழமையான காலமல்ல. ஆகையால் இந்தப் பாட்டு கம்பனுடைய காலிலேயோ அல்லது அதற்குக் கொஞ்சமே கொஞ்சம் நாட்களுக்குப் பிந்தியே தானே பாடப்பட்டிருக்க வேண்டும் என நினைப்பது நியாயவிரோதமாகாது.

கம்பன் காலம் சகம் அ-கூ-ம் நூற்றாண்டுகளல்ல என்றும், அவன் சகம் க௦சஉ-ம் ஆண்டுக்கு அணித்தாகப் பிறந்து கககஉ-க்கு அணித்தாக இறந்திருக்க வேண்டும் என்றும் சில பண்டிதர்கள் அபிப்பிராயப்படுவதற்குக் காரணம், கம்பனும் ஒரு குலோத்துங்கச் சோழனும் ஒட்டக்கூத்தனும் பிரதாபருத்திர தேவனும் சமகாலத்தவர் என்று கர்ணபரம்பரைகள் கூறுவதும்; ஒட்டக்கூத்தன் உலாவால் பாடிய மூன்று சோழர்களும் பிரதாபருத்திரனும் சகம் 11-வது 12 வது நூற்றாண்டுகளுக்கிடையில் விளங்கினார்கள் எனச் சிலாசாஸனிகள் நிச்சயித்திருப்பதுமே. சிலாசாசனங்கள் எப்பொழுதும் ஒப்புக்கொள்ளத்தக்க பிரமாணம் என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் அந்த சாசனங்களில் குறிக்கப்படும் வருஷங்கள் எந்தச் சகாப்தத்திலிருந்து கணக்கிடப்படுகின்றன என்று நிர்ணயிப்பதில் எப்பொழுதும் அபிப்பிராயபேதங்களிருக்கின்றன. ஆகையால் சிலாசாசனிகளுடைய நிர்மானங்களைப் பூர்ணப்பிரமாணமாகக்கொள்ளுவது சரியாகாது. பிரதாபருத்திரனுக்கும் கம்பனுக்கும் கற்பிக்கிற சம்பந்தத்தைப்பற்றி I-வது அடிக்குறிப்பில் எழுதியிருக்கிறோம். ஒட்டக்கூத்தன் உலாவால் பாடிய விக்கிரமன், குலோத்துங்கன், ராஜராஜன் என்ற பேர்களுள்ளசோழர் மூவரும் ஒருவர்பின் ஒருவராக சகம் க௦சம் முதல் கககஉ-க்கு மேல் வரையில் அரசாண்டார்கள் என்பது சிலாசாசனிகளின் அபிப்பிராயம். இது உண்மையாக இருக்கும்பக்ஷத்தில் கம்பனும் ஒட்டக்கூத்தனும் சமகாலத்தவர்களாக இருந்திருக்க முடியாது என்றுதான் நமக்குத் தோன்றுகிறதே ஒழிய, கம்பன் சகம் கக-வது கஉ-வது நூற்றாண்டுகளில் விளங்கியிருக்கவேண்டும் என்று நிச்சயிக்கத் தோன்றவில்லை.

கம்பனும் ஒட்டக்கூத்தனும் சமகாலத்தவர் என்று எல்லாக் கர்ணபரம்பரைகளும் ஒத்துக் கூறும்போது இதைஎப்படி மறுக்கலாகும் என்று ஓர் கேள்வி பிறப்பது இயற்கை. ஆனால் வேறுவேறு காலங்களிலிருந்த மகான்களையும் மகா கவிகளையும் ஒரே காலத்திலிருந்ததாகச் சொல்லுவது கர்ணபரம்பரைகளுக்குச் சர்வசாதாரணமாயிருக்கிறது. அராபியக் கதைகளெல்லாம் "அரூன் அல்ரஷித் காலத்திலே" என்று ஆரம்பிப்பதை எல்லோரும் பார்த்திருப்பார்கள். நம் நாட்டுக் கதைகளிலும் "அசோகன் காலத்திலே" என்றும், "விக்கிரமார்க்கன் காலத்திலே" என்றும், "போஜராஜன் காலத்திலே" என்றும், ஆரம்பிக்கிற கதைகளை நீக்கிவிட்டால் மிகுதியுள்ள கதைகள் மிகச்சொற்பமாகத்தானிருக்கும். காளிதாசன் விக்கிரமாதித்தன் காலத்திலிருந்தான் என்று ஒரு கதைகூறும். அவன் போஜராஜன் காலத்தவன் என்று மற்றொரு கதை சொல்லும் என்பது நமது பழைய பண்டிதர்களின் கொள்கை. ஆனால் இவ்விருவருக்கும் மத்தியில் குறைந்தது இரண்டு நூற்றாண்டுகள் உண்டு என்று சில நவீன பண்டிதர்கள் கூறுகிறார்கள். ஒளவையார் திருவள்ளுவர் காலத்திலும், நக்கீரர் காலத்திலும், கம்பன் காலததிலும் இருந்தாள் என்று நமது கர்ணபரம்பரைகள் சொல்லுகின்றன. அப்படியானல் அவள் சுமார் 830 வருஷம் ஜீவித்திருந்தாளெனக் கொள்ள வேண்டிவரும். இப்படிக்கெல்லாம் இருப்பதினால் கம்பனும் ஒட்டக்கூத்தனும் வேறு வேறு காலத்தவர்களாயிருந்தால் கர்ணபரம்பரைகள் அவர்களை ஏககாலத்தவர் என்று சொல்லா என்றுசொல்ல இடமில்லை.

கர்ணபரம்பரையாக வந்தன என்று சொல்லப்படும் கதைகளிலநேகங்களைப் பொழுதுபோகாமலிருக்கிற பண்டிதர்களால் சமயோசிதமாகக் கற்பிக்கப்பட்டவையாகத்தான் மதிக்கவேண்டுமே என்று பின்வரும், கர்ணபரம்பரையில் கேட்ட, கதையே நமக்குச்

காட்டும். கம்பன் ஒட்டக்கூத்தனுடைய பொறாமைக்குச் சற்று சோர்த்துக்காகிலும் ஒரு ஆறுதல்உண்டாக்கவேண்டும் என்ற எண்ணத்துடன், மாறுவேடம்பூண்டு அவனிடம் சென்று கம்பன் இறந்துவிட்டான் என்று சொன்னானாம். அது கேட்டதும் ஒட்டக்கூத்தன்,

இன்றைக்கோ கம்பன் இறந்த நாள்! என் கவிதை
இன்றைக்கோ அரசு அவைக்கு ஏற்கும்நாள்! – இன்றைக்
பூமடந்தை வாழ, புவி மடந்தை வீற்றிருக்க, [கோ
நாமடந்தை நூல் வாங்கும் நாள்!

என்று பாடவே, பாட்டின் அறத்தினால் கம்பன் அங்கேயே உயிரற்று விழுந்துவிட்டானாம். ஒட்டக்கூத்தன் உடனே பரிதபித்துக்கொண்டு அறத்தை மாற்றி,

இன்றைக்கோ கம்பன் எழுந்த நாள் ! என் கவிதை
இன்றைக்கோ அரசு அவைக்கண் ஏறு நாள் !— இன்றைக்
பூ மடைந்து வாழ, புவிமடந்தை வீற்றிருக்க, [கோ
நா மடந்தை நூல் பூட்டும் நாள் !

என்று திருப்பிப் பாடினதும் கம்பன் உயிர்பெற்றெழுந்துவிட்டானாம்.

ஆனால் "இன்றைக்கோ கம்பன் இறந்த நாள்" என்று துவங்கும் வெண்பாவானது, தமிழ் நாவலர் சரிதையில் சிறிது மாற்றப்பட்டு, "கம்பன் சோழனால் கொலையுண்டான் என்று கேட்ட புலவர்கள் பலராலும் பாடப்பட்டது" என்ற தலைப்பின்கீழ் வருகிறது.

அப்படியே சோழன் வில்லால் அடிபட்டு வீழ்ந்த காலத்தில் கம்பன்,

வில் அம்பு சொல் அம்பு மேதகவே ஆனாலும்,
வில் அம்பின் சொல் அம்பு வீறு உடைத்து !— வில் அம்பு
பட்டு உருவிற்று என்னை: என் பாட்டு அம்பு நின் குலத்தைச்
சுட்டு எரிக்கும் என்றே துணி !

என்று ஓர் அறம் பாடினான் என்று தமிழ் நாவலர் சரிதையில் சொல்லப்படுகிறது. ஆனால் இது, பாண்டியன் அம்பாலடிக்க ஔவை பாடியதாகக் கூறும்,

வில் அம்பு சொல் அம்பு மேதினியில் இரண்டு உண்டு;
வில் அம்பின் சொல் அம்பே மேல் அதிகம் ; — வில் அம்பு
பட்டது, அடா, என் மார்பில், பாண்டியா! நின் குலத்தைச்
சுட்டது, அடா, என் வாயின் சொல்!

என்ற பாட்டைச் சிறிது மாற்றிக் கம்பன்மேல் ஏற்றினதாக இருக்கிறதே ஒழிய வேறில்லை. இந்தக்கதைகள் சம்பந்தப்பட்டவரையில் தமிழ் நாவலர் சரிதையின் கதைகள்தான் ஆதிக் கதைகள் என்று ஏற்பட்டாலும், கர்ணபரம்பரைகள் விஷயத்தில் நாம் மிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்று இவை காட்டுகின்றன என்பதற்குச் சந்தேகமில்லை.

இனி ஒட்டக்கூத்தனையும் கம்பனையும் சேர்த்துக் கூறும் கதைகளைச் சற்று ஆராய்வோம்.

புதுவைச் சடையன் பொருந்து சங்கரனுக்கு
உதவித் தொழில் புரி ஒட்டக்கூத்தனே,

என்று ஆரம்பிக்கும் வரிகள், புதுவைக்கு அதிபதியான சடையனுக்குப் பந்துவான சங்கரனிடம் ஒட்டக்கூத்தன் உதவித் தொழில் புரிந்துவந்தான் என்று சொல்லுகின்றன. கம்பனுடைய நண்பனாகிய சடையப்ப வள்ளலுடைய தகப்பனுக்குச் சங்கரன் என்று பெயர். இதனால் இந்தச் சங்கரனிடம்தான் ஒட்டக்கூத்தன் வேலை பார்த்தான் என்று சொல்லப்படுகிறது. ஆனால் பாட்டன் பெயரைப் பெயரனுக்கு வைக்கிற வழக்கம் தமிழ்நாட்டில் அதிகமானதால் குடி அழியாதிருக்கிறவரையில் ஒவ்வொரு தலைமுறையிலும் புதுவை அதிபதிகளின் குலத்தில் ஒரு சங்கரனும் ஒரு சடையனும இருந்தே தீருவார்கள் என்று நம்ப நிரம்ப இடமுண்டு. அப்படியே ஒட்டக்கூத்தன்பாடிய விக்கிரம சோழன் உலாவில்,

......................................மோட்டு அரணைக்
கொங்கைக் குலைத்துக் குடகக் குவடு ஒடித்த
செங்கைக் களிற்றுத் திரிகர்த்தனும்,
......................................மட்டை எழக்
காதித்திருநாடர் கட்டு அரண்ம் கட்டு அழித்த
சேதித் திருநாடர் செல்வனும்,

விக்கிரமனோடு இருந்ததாகப் பாடியிருப்பதில், திரிகர்த்தன், சேதி, என்கிற பெயர்கள் முறையே கம்பனுடைய ரக்ஷகனான சடையப்பனையும், கம்பன் ஏரெழுபது அரங்கேற்றிய காலத்தில் உடனிருந்த சேதிராயனையும் தான் குறிக்கின்றன என்று சொல்லப்படுகிறது. ஆனால் திரிகர்த்தன் என்னும் பட்டப் பெயர் கம்பனுடைய நண்பனுக்குத்தான் முதலில் கொடுக்கப்பட்டது என்று வைத்துக்கொண்டாலும், அவன் வழிமுறையில் வந்தவர்களுக்கெல்லாம் அந்தப் பெயர் கொடுக்கப்பட்டுவந்திருக்கவேண்டும் என்று சொல்லுவதில் விகற்பம் ஒன்றுமில்லை. சேதிராயன் என்பதும் ஒரு மனிதனுக்கு இயற்பெயரல்ல; ஒரு குடியின் தலை

வாகனுக்குப்பரம்பரையாகவரும் பொதுப் பெயரோகும். ஆகையால் கூத்தன் உலாவில் இவ்விரண்டு பெயர்களும் வருவதிலிருந்து கம்பன் காலத்திலிருந்த சேதிராயனையும் சடையனையும் தான் இவை குறிக்கின்றன என்று ஒருதலையாகக் கூறிவிடமுடியாது.

ஒட்டக்கூத்தனுக்கும் கம்பனுக்கும் நேரே சம்பந்தத்தைக் காட்டும கதைகள் நமக்குத் தெரிந்தமட்டில் நாம் ஏற்கெனவே சொல்லியதைத் தவிர இரண்டே இரண்டுதான். அவைகளில் ஒன்று பின்வருமாறு. சோழன் இவ்விரண்டு புலவர்களையும் ராமாயணம்பாட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு சில காலம் கழித்து அவர்களை வரவழைத்துக் காவியம் எதுவரையில் சென்றிருக்கிறது என்று இருவரையும் கேட்க, கம்பன் எழுதத் துவக்கியே இல்லாவிட்டாலும் ஒட்டக்கூத்தனுக்குமேல் தான் எழுதிவிட்டதாகச் சொல்லவேண்டும் என்று சேதுபந்தனப் படலம்வரையில் தான் பாடியதாகச் சொல்லி, அங்கேயே இந்தப்பாட்டைக் கவனம்செய்து பாடினானும்.

குமுதன் இட்ட குலவரை, கூத்தரின்
திமிதம் இட்டுத் திரையும் திரைக்கடல்
துமிதம் ஊர் புக வானவர் துன்னினர்,
அமுதம் இன்னும் எழும் எனும் ஆசையால்!

இந்தச் செய்யுளில் வரும் துமிதம் என்னும் வார்த்தை நிகண்டுக்களிலாவது வழக்கிலாவது இல்லை யென்று ஒட்டக்கூத்தன் ஆக்ஷேபித்தானும். கம்பனும், "நானும் அறியேன், அவளும் பொய்சொலாள்." என்று சொல்லிவிட்டு சரஸ்வதியைத் தியானிக்க, அவள் கற்பித்தபடிப்ரகாரம் ஒட்டக்கூத்தனையும் அரசனையும் தன்னோடு இடைத் தெருவுக்கு அழைத்துக்கொண்டு போனானும், அங்கே இடைச்சிபோல் வந்திருந்த கலைவாணி தன் குழந்தைகளைப் பார்த்து, "துமி தெறிக்கும் எட்டவிருங்கள்," என்று கூறியதைக்கண்டு ஒட்டக்கூத்தன் ஒப்புக்கொண்டு விட்டானும்.

மற்றொரு கதை இதுவாம். கம்பனுடைய ராமாயணத்தின் பெருமையைக் கண்டு ஏங்கி, கூத்தன் தன் ராமாயணத்தை முதலிலிருந்து கிழித்துக்கொண்டு வருகையில், அகஸ்மாத்தாய் அவ்வழி போன கம்பன், கூத்தன் வீட்டினுள் சென்று, உத்தரகாண்டம் சிதைவுறாமல் இருப்பதைப்பார்த்து, "நான் உத்தரகாண்டம் பாட உத்தேசிக்கவில்லை யாதலால், தங்களுடைய உத்தரகாண்டத்தைக் கிழிக்காமல் வைத்து என் ஆறு காண்டங்களோடு சேர்த்து வைக்க வேண்டும்," என்று கேட்டுக்கொண்டானும். கூத்தனும் அதற்கு இணங்கி அதை நிறுத்திக்கொண்டானும்.

ஆனால் ஒட்டக்கூத்தனுடைய அழுக்காறும அகங்காரமும் நிறைந்த சுபாவத்தைக் கவனிக்கும் போது, கம்பன் அவன் காலத்தவனாயிருந்தால் அவனிடம் இத்தமாதிரி வார்த்தை சொல்லத் துணிந்திருப்பான் என்றாவது, அப்படியே கம்பன் சொல்லியிருந்தாலும் ஒட்டக்கூத்தன் அதற்குச் சம்மதித்திருப்பான் என்றாவது நினைக்கமுடியவில்லை.

தவிர, சோழ மண்டல சதகத்தில்,

பூண் நிலாவும் கம்பன் நலம் பொலியும் தமிழால்
பொலிவு எய்திக்
காணும் ஆறு காண்டம் உறும் கதையின் பெரிய
கதைஎன்னும்,
தாள் நிலாவும் கழல் அபயன் சபையில் பயில்
உத்தரகாண்டம்,
வாணிதாசன் அரங்கேற்ற வைத்தார் சோழ
மண்டலமே,

என்று வருகிற செய்யுள், வாணிதாசன் என்ற புனைபெயர்பூண்ட ஒட்டக்கூத்தன் தன் உத்தரகாண்டத்தை அபயன் என்னும் சோழ அரசன் சபையில் அரங்கேற்றினான் என்று கூறுகிறது. ஆனால் நாம் மேலே சொன்ன கதையில் ஏதேனும் உண்மையிருந்தால் ஒட்டக்கூத்தன் தன் உத்தரகாண்டத்தை அரங்கேற்றக் கூறியிருப்பான் என்று தோன்றுகிறது. இந்தப் பாட்டில் ஒட்டக்கூத்தன் முதல் ஆறு காண்டங்களைப் பாடியதாகச் சொல்லாதிருப்பதும் கவனிக்கத் தக்கது. அபயன என்பதும், சகம ௯௯௨ முதல் ௲௪௰ வரையில் அரசாண்ட உபயகுலோத்தமன் என்கிற குலோத்துங்க சோழனுடைய பெயர்களில் ஒன்றாகும். சதகச்செய்யுள் அவனைத்தான் குறிக்கின்றது என்றுவைத்துக்கொண்டால் ஒட்டக்கூத்தனை ஸ்ரீ ரா. ராகவையங்கார் முதலியபண்டிதர் சொல்லும் காலத்துக்கு ஒரு தலைமுறை மேலே ஏற்றவேண்டிவரும்.

ஆனால் "செந்தமிழ்"ப் பத்திரிகை மூன்றாம்தொகுதியில் நிர்ணயித்திருக்கிறபடி ஒட்டக்கூத்தன் விலாசசனிகளால் இரண்டாவன் * என்று சொல்லப்பட்ட குலோத்துங்கனுடைய அவையில்தான் உத்தரகாண்டத்தை அரங்கேற்றினான் என்று வைத்துக்கொண்டு பார்ப்போம். ஸ்ரீமத் ராமானுஜாசாரியார் காலமாவ

தற்கு முன்பே இந்தக் குலோத்துங்கன் இறந்து போய்விட்டான் என்றும், ராமானுஜர் சகம் 1059-இல் பரமபதமடைந்தார் என்றும் குருபரம்பரை கூறுவதால், இந்தக் குலோத்துங்கச்சோழன் சகம் 1059-க்கு முன் நாலைந்து வருஷங்களே ஆண்டுவிட்டு இறந்து போயிருக்கவேண்டும் என்று ஸ்ரீமான் ராகவையங்கார் ஒப்புக்கொள்ளுகிறார். அப்படியானால் ஒட்டக்கூத்தன் தன் உத்தரகாண்டத்தை சகம் 1059-க்கு முன் அரங்கேற்றியிருக்கவேண்டும். நாம் ஏற்கெனவே சொல்லியிருக்கிற கர்ணபரம்பரையை ஒப்புக்கொண்டால் கம்பனும் ஒட்டக்கூத்தனும் ஏக காலத்தில் ராமாயணம் பாட ஆரம்பித்தார்கள் என்று கொள்ளவேண்டும். ஒப்புக்கொள்ளாவிட்டால், ஏற்கெனவே ஆறுகாண்டங்கள் பாடப்பட்டுப் புகழெய்தியிருந்தால தான் ஒரு கவிக்கு உத்தரகாண்டம் மாத்திரம் பாடவேண்டும் என்று தோன்றுவது இயற்கை, என்கிற விஷயத்தை ஒப்புக்கொண்டு, கம்பன் தன் ராமாயணத்தை சகம் 1059-க்கு அநேக வருஷங்கள் முன்னையே பாடி முடித்துப் பேர் பெற்றிருக்கவேண்டும் என்று நாம் கூறுவதற்கு இணங்கவேண்டிவரும். எதற்கும் கம்பன் சகம் 1042-க்குச் சமீபத்தில் பிறந்திருந்தால் 1059-க்குள் ராமாயணம் பாடி அரங்கேற்றிச் சிறெய்தியிருப்பது அசாத்தியமென்று சொல்லவேண்டுவதில்லை.

இன்னும், புகழேந்தியும் ஒட்டக்கூத்தனும் சமகாலத்தவர் என்று கர்ணபரம்பரைக் கதைகள் கூறுகின்றன. விக்கிரம சோழனையும் குலோத்துங்க சோழனையும் புகழேந்தியும் பாடியிருப்பதால் இவ்விரு கவிஞரும் ஒரேகாலத்தவர்தாம் என்று நாமும் ஒப்புகிறோம். கம்பனும் ஒட்டக்கூத்தன் காலத்தவன் என்று கொண்டால், ஏற்கெனவே சொல்லியபடி, நாலைந்து வருஷங்கள்தான் அரசாண்ட குலோத்துங்கன் ஆட்சிக்கு நெடுங்காலம் முன்னதாகவே ராமாயணம் பாடி அரங்கேற்றியிருக்கவேண்டிய அவன் புகழேந்தி சிறோடு விளங்கின காலத்திலேயே தானும் விளங்கினான் என்று ஏற்படும். அப்படியிருந்தால், ஒட்டக்கூத்தனுக்கும் புகழேந்திக்கும் சம்பந்தம் கூறும் கதைகள் எத்தனையோ இருக்கையில், கம்பனுக்கும் புகழேந்திக்கும் நேரே சம்பந்தத்தைக் காட்டக் கூடிய ஒரு கதையேனும் ஏன் இல்லை என்ற இயற்கையாகப் பிறக்கக்கூடிய கேள்விக்குச் சரியான பதில் சொல்லமுடியாது. இம் மூன்று கவிகளும் உண்மையாகவே ஒரு காலத்தவராக இருந்திருக்கும் பட்சத்தில், ஒட்டக்கூத்தனுடைய அழுக்காற்றுக்கும் குரோதத்துக்கும் இலக்கமாயிருந்தமற்ற இருவருக்கும் மிக நெருங்கியநட்பு இருந்திருக்கும்; அந்த நட்பைக் காட்டக்கூடிய கதைகளும் நமக்கு எட்டியிருக்கும்.

இன்னொன்று, கம்பன் சகம் 1042 முதல் 1122 வரையிலுள்ள காலத்தில் விளங்கினான் என்று கொண்டால் உடையவர் காலத்திற்கு மிகவும் நெருங்கிக் கம்பன் பிரபலத்துக்கு வந்திருக்கவேண்டும் என்று ஏற்படும். அப்படியானால் அவருடைய திவ்வியப் பிரபாவத்தைக்கண்ணால் கண்ட சிஷியவர்க்கத்தில் பெரும்பாலாரை நேரில் பார்த்திருக்கவேண்டிய ஸ்ரீ வைஷ்ணவ தாசனான கம்பன் அந்த மகானைக் குறித்து ஒருதுதியேனும் எழுதாமலிரான். அப்பேர்ப்பட்ட செய்யுள்கள் ஒன்றேனும் இப்பொழுது காணப்படாதது கவனிக்கத்தக்கது.

தவிர, கம்பனுக்கு இந்தக் காலத்தைக் கற்பித்தால் அவன், உபயகுலோத்துங்கனைப்பாடிய கலிங்கத்துப்பரணி எழுதப்பட்ட காலத்துக்குப் பின் தான் விளங்கினவன் என்று ஏற்படும். ஆனால் பரணியில் சோழநாட்டரசர் சூரிய குலத்தவர் என்றும், சோழராஜ்ஜியம் ஸ்ரீராமனுடைய மூதாதைகளில் ஒருவனால் ஸ்தாபிக்கப்பட்டது என்றும் சொல்லப்படுகிறபோது, கம்பன் ராம கதையில் பால காண்டம் குலமுறைகிளத்துப் படலத்திலாவது, கிஷ்கிந்தாகாண்டம் நாடவிட்ட படலத்திலாவது இதைப்பற்றிப்பேசாமலிரான். மேலும் தான் பரதெய்வமாகக் கருதியிருக்கிற ஸ்ரீராமன் குலத்தவரைப்பற்றித் தன் ராமாயணத்தில் உற்சாகத்தோடும் அபிமானத்தோடும் அவன் பேசாமலிருக்க முடியாது. ராமாயணத்தின் முடிவில் வரும் வாழ்த்துப்பாக்களில்கூட சோழ அரசர் பெயர் வரவில்லை. ஆகையால் சோழ வமிசம் இக்ஷ்வாகு வமிசத்திலிருந்து பிரிந்தது என்ற கலிங்கத்துப்பரணிக் கதை பிறக்கு முன்னமே கம்பன் ராமாயணத்தைப்பாடியிருக்கவேண்டுமென்று ஏற்படுகிறது.

ஒட்டக்கூத்தன் காலத்திலிருந்து கம்பன் காலத்தை நிர்ணயிப்பதில் இத்தனை முரண்பாடு சம்பவிக்கிறது. தொன்று தொட்டு வந்திருக்கிற தனியன் பிரகாரம் கம்பன் ராமாயணத்தை சகம் 807-இல் அரங்கேற்றினான் என்று கொள்ளுவதற்குச் சரியான ஆக்ஷேபணை ஒன்றும் எனக்குத் தோன்றவில்லை.

அரங்கேற்றிய காலத்துக்குச் சுமார் இருபது வருஷங்களுக்கு முன்னால் கம்பன் ராமாயணம் பாட ஆரம்பித்தான் என்று வைத்துக்கொண்டால் கம்பன் விஜயாலய சோழன் காலத்தில் அல்லது அவனுக்குப்பின் ஆண்ட ஆதித்த சோழன் காலத்தில் அந்தக் காவியத்தைப் பாடிவந்தான் என்று ஏற்படும். இந்தச் சோழர்களும் மற்றத் தமிழ் நாட்டரசர்களையும் ஒன்று சேர்த்துக் கொண்டு பல்லவர்களோடு கடும்போர் புரிந்து வந்தார்களாம். தமிழ் நாட்டுக்குச் சுதந்தரம் கொடுக்கமுயன்ற பெருந்தகைகளைப்பற்றி சுந்தரமூர்த்திசுவாமிகள் தன் தேவாரத்தில் ஓரிடத்தில் பேசியிருப்பது போலக் கம்பன் பேசவில்லை-என்பது விசனிக்கத் தக்கதே. ஆனால் சடையப்ப வள்ளலைப் பாடிய அளவு கம்பன் ராமாயணத்தில் சோழர்களைப் பாடவில்லையாகையால் அவன் பாடியகாலத்தில் சோழர்கள் தமிழ் நாட்டில் தலைமை வகிக்கவில்லையென்றும், சாமானிய அரசர்களாகத்தான் இருந்திருக்கவேண்டும் என்றும் ஏற்படுகிறது என நினைக்கிறோம்.

கதைகள் கம்பனுக்கும் ஒரு குலோத்துங்கனுக்கும் சமகாலத்துவம் கற்பிக்கின்றன. தென்னாற்காடு ஜில்லா நாராயணவனத்திலுள்ள அகஸ்தியேச்சுவரன் கோவிலில் சகம் 829-ம் வருஷமானது ஒரு குலோத்துங்க சோழனுடைய 11-வது ஆட்சி வருஷமாக இருந்தது என்றுகாட்டும் சாசனம் ஒன்றுஇருக்கிறதென்று ஸ்ரீமான் ரா. ராகவயங்கார் எடுத்துக்காட்டுகிறார். சகம் 807-இல் ராமாயணம் அரங்கேற்றிய கம்பன் சகம் 819-இல் குலோத்துங்கன் என்ற பெயரும் கொண்ட முதல் பராந்தகன் அவையிலும் பிரகாசித்தான் என்று சொல்லுவதில் அசம்பாவிதம் ஒன்றும் இல்லை.

தவிர, கம்பன் ஸ்ரீரங்கத்தில் ராமாயணம் அரங்கேற்றிய சபையில் ஸ்ரீமந் நாதமுனிகள் தலைமை வகித்தார் என்றுகர்ணபரம்பரை சொல்லுகிறது. நாதமுனிகள் கலி 4024, அதாவது சகம் 84[illegible]-ம் வருஷத்தில் முதிர்ந்தவயதில் காலம் சென்றதாக ஒரு வைஷ்ணவக் கிரந்தம் கூறுகிறது. ஆனால் ஸ்ரீ கோபிநாதராயா அபிப்பிராயப்படுவதுபோல நாதமுனிகள் சகம் 912-இல் தான் அவதரித்திருக்கவேண்டும் என்று நம்பினாலுங்கூட, கம்பனும் நாதமுனிகளும் ஏககாலத்தவர் என்பதை வேண்டுமென்றால் மறுத்துக்கொள்ளலாம், கம்பனுடைய காலத்தைக் கீழே கொண்டுவர அவசியமில்லை. கம்பராமாயணத்திலிருந்து இரண்டு செய்யுள்கள் திவ்யப்ரபந்தத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்று ஒரு கர்ணபரம்பரை கூறுகிறது. இது உண்மையாக இருந்தால், நாதமுனிகள் காலத்தில் திவ்யப்ரபந்தம் அனைத்தும் தொகுத்தாய்விட்டதாகையால் கம்பன் நாதமுனிகள் காலத்தவன் என்றாவது அவருக்கு முந்தினவன் என்றாவது தான் ஏற்படுமேயல்லாது அவருக்குப் பிந்தினவன் என்று ஏற்படாது.

கம்பன் ௰-வது நூற்றாண்டு (கி.பி. ௧௧-வது)க்கு முற்பட்டவனாக இருக்கவேண்டும் என்பதற்கு இன்னும் இரண்டு துணைக்காரணங்களும் காட்டுவோம். சேக்கிழார் பெரியபுராணம் பாடியது சகம் ௧௧-வது நூற்றாண்டின் முதற்காலாக இருக்கவேண்டும் எனப் பண்டிதர் நிச்சயித்திருக்கிறார்கள். கம்பராமாயணம் பெருங் காப்பியமேயானாலும் வைஷ்ணவ பரமாயிருக்கிறதாகையால், சிவபரமாக ஒரு பெருங்காப்பியம் செய்தருளுவீர் என்று, முதலவன் என்று நவீனசரித்திரக்காரரால் கூறப்பட்ட குலோத்துங்க சோழன் சேக்கிழாரைக் கேட்டுக்கொண்டதன்பேரில் தான் அவர் பெரிய புராணம் பாடினார் என்று ஓர் கர்ணபரம்பரை கூறுகிறது. இந்தக் குலோத்துங்கன் ஆண்டது சகம் ௯௯௨ முதல் ௲௪௨ வரையிலாகையால் கம்பராமாயணம் இவன் காலத்தில் பிரசித்தமான காவியமாக இருந்தது என்று ஏற்படும். தவிர, கம்பன் காலத்தில் கம்பன் எனனும் பெயர் புதிதாயிருந்தது பற்றி அந்தப் பெயர் அவனுக்கு வந்ததற்கு நானாவிதமான காரணங்கள் சொல்லிவந்தார்கள். ஆனால், சகம் ௯௩௪-இல் கம்பன் என்ற பெயருள்ள அதிகாரி ஒருவன் திருக்கோவலூருக்கு மேற்கேயுள்ள கீழூரில் வீரட்டானேசுவரர் கோவிலில் பொன் பூக்களும், ஒரு மணிப்பட்டமும், ஒரு வெள்ளிப்பீடமும் சமர்ப்பித்தான் என்று அக்கோவில் கர்ப்பக்கிரகத்திலுள்ள கல்வெட்டினின்று ஏற்படுகிறது. இந்தக்கல்வெட்டில் நம் வாதத்திற்கு வேண்டிய பாகம் பின்வரும் வெண்பா:

> வேலியர்கோன், வீதிவிடங்கன், விறல் கம்பன்,
> ஆலியமான், சோழன் அதிகாரி—கோலப்
> படியின் மேல் பொன் பூப் பைங்கோவல் வீரட்டர்
> முடியின் மேல் வைத்தான் முயன்று.

இதிலிருந்து கம்பன் என்னும் பெயர் சகம் ௯௩௪-இல் சகஜமான பெயராக இருந்தது என்று ஏற்படுகிறது. நமது கம்பன் ௧௨-வது நூற்றாண்டில் விளங்கினவனாக இருந்தால் அவன் காலத்தில் அந்தப் பெயரை அது வரையில் மனிதருக்கு வைத்து வைத்து வழக்கமில்

லாத பெயராக நினைத்து அந்தப் பெயர் வந்ததற்குக் காரணங்கள் தேடியிருக்க மாட்டார்கள் என்பது அனேகமாய் நிச்சயம்.

இனி, பாலகாண்டம் கடிமணப்படலத்தில் ராமன் செய்துகொண்ட கோலத்தை வர்ணித்துவரும்போது,

என்றும் நான்முகன் முதல் யாரும், யாவையும்,
நின்ற பேர் இருளினை நீக்கி, நீள் நெறி
சென்று, மீளாக் குறி சேரச் சேர்த்திடு
தன் திரு நாமத்தைத் தானும் சாத்தியே,

என்று வரும் செய்யுளில் சொல்லும் திருநாமம் சாத்திக்கொள்ளும் வழக்கம் எக்காலத்தில் பிறந்தது என்று விசாரித்ததில், அந்த வழக்கம் ஸ்ரீமந் நாதமுனிகள் காலத்திலேயே இருந்தது என்று வைஷ்ணவ சம்பிரதாயம் அறிந்தவர்கள் எமக்குச் சொன்னார்கள். அது நெடுநாள் பிற்பட்டு உண்டான வழக்கம் என்று ஏற்படும் பக்ஷத்தில் கம்பனுடைய காலத்தை (சகம் ௮௱௭-ஐ) வெட்டாது. எப்படியும் உண்மையைக் கண்டு பிடிப்பதேதான் நமது நோக்கமாதலால், கற்றோர் திருநாமம் அணிகிற வழக்கம் எப்பொழுது ஆரம்பித்தது என்பதை நிர்ணயித்து, அவசியமானால் மேலே நாம் கம்பனுக்குத் தீர்மானித்திருக்கிற காலவரையறையைத் திருத்தவேண்டும் என்கிற எண்ணத்தோடே இந்தச் செய்யுளை இங்கே எடுத்துக்காட்டுகிறோம்.

ஆகையால் ஒப்புக்கொள்ளத்தக்க வேறு ஆக்ஷேபணைகள் தோன்றும் வரையில், கம்பன் சாலிவாகன சகாப்தத்தின் ௮-வது நூற்றாண்டின் பிற்பகுதியிலும் விளங்கினான் என்றும், மேலே எடுத்துக்காட்டியுள்ள தனியன் பிரகாரம் சகம் ௮௱௭-ல் தன் காவியத்தை அரங்கேற்றினான் என்றும் தான் கொள்ளவேண்டும் என்று தோன்றுகிறது.

ஔரங்கசீபும் மகாராஷ்டிராரும்

ஸ்ரீமாந் S. முத்துசுவாமிப் பிள்ளையவர்கள்.

சரித்திரத்தில் முதன்மை பெற்ற பல சம்பவங்கள் அநேகமாய்க் கட்டுக் கதைகளாகவே இருக்கின்றன. இந்துதேசசரித்திரத்தில் மிகவும் இழித்துக்கூறப்படும் "இருட்டறைவிபத்து" (The Black-hole disaster) என்னும் நிகழ்ச்சி, இந்தியரிடத்துச் சிறிதளவேனும் அன்போ அநுதாபமோ இல்லாத சில ஐரோப்பியர்களின் கலக்கம்பெற்றமூளையில் உற்பத்தியானதேயன்றி உண்மையில் நிகழ்ந்ததல்லவென்று தற்காலச் சரித்திராசிரியர்கள் நிரூபிக்கின்றார்கள். ஔரங்கசீபைப் பற்றிய கொடிய கதைகளில் பலவும் இத்தகைய பொய்ச் சரிதக் கூற்றுகளைச் சேர்ந்தனவேயாம்.

ஔரங்கசீப் தனது சொந்த மகமது மதத்தில் மிகவும் பற்றுடையவர். கொறான விதிகளுக்கு எதிரிடையாக அவர் நடப்பதே இல்லை. ஆகையால் அவரது உண்மை நிலையை அறியாத பிறர் அவர்மேல் பல பாதகச் செயல்களை ஏற்றிவைத்தனர். ஆகவே நமது பள்ளிச் சிறுவர்கள், ஔரங்கசீப் பிதாவைக் கொன்றான்; சகோதரனைக் கொல்வித்தான்; இந்துக்களை இம்சித்தான்; மகாராஷ்டிரரோடு போராடி தென்னாட்டிலுள்ள மகமதிய தேசங்களையெல்லாம் அழித்தான், மொகலாய மகாராஜ்யத்தை வேரறஒழித்தான். எனத் தினந்தோறும் பாராயணம் பண்ணுகிறார்கள். மேலே கூறியவற்றுள் இறுதியில் வருவதாகிய மகாராஷ்டிரப் போராட்டத்தைப்பற்றி இம்முறை பாரபட்சமின்றி ஆராயத் தொடங்குவோம். ஔரங்கசீப் மீது சாற்றப்படும் குற்றங்கள் பின் வருபவைகளாம்.

1. ஔரங்கசீபின் அடாச் செயல்களாலேயே மகாராஷ்டிரர் மொகலாயர் ஆணைக்கு அடங்காதுபோர்க்கோலங்கொண்டனர்.

2. சிவாஜி ஔரங்கசீபின் அரண்மனைக்குச் சென்றபொழுது ஔரங்கசீப் சிவாஜியை மிக இழிவாக நடத்தினான். அதுபற்றியே அவன் மொகலாயரிடத்துப் பகை கொண்டான. ஔரங்கசீப் சிவாஜியைத் தக்க மரியாதையுடன் வரவேற்றிருந்தால் சிவாஜி ஔரங்கசீபை மேலரசனாக ஒப்புக்கொண்டிருப்பான்.

3. சிவாஜிக்கு மாப்புக் கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்து வரவழைத்து, ஔரங்கசீப் அவனைச் சிறையிலடைத்தான்.

4. சிவாஜியின் பின் வந்தவர்களை ஔரங்கசீப் ஒழுங்காக நடத்தவில்லை.

5. மகாராஷ்டிரர் மொகலாயர் ஆணையை மீறிய பின்னர் ஔரங்கசீபுக்கு அவர்களை அடக்கமுடியவில்லை. மொகலாய மகாராஜ்யத்தின் நாசத்துக்கு

மகாராஷ்டிரரே முக்கிய காரணர் ஆகையால், அதற்கு மூலகாரணன் ஔரங்கசீபே.

இவ்விஷயங்களைப் பற்றி ஒரு முடிவான அபிப்பிராயம் கூறப்புகுமுன் சிவாஜியின் குடும்பத்தின் ஆதிகாலச் சரித்திரத்தைப்பற்றி சிறிது கூறவேண்டிய அவசியமுமாகும்.

சிவாஜி உதயப்பூர் மகாராஜாவின் வமிசத்தைச் சேர்ந்தவன். சில காரணங்களால் அந்த வமிசத்தைச் சேர்ந்த ஸாரஸேன் (Sorseen) என்னும் ஒருவன் சித்தூரை விட்டு, தெட்சிணத்து வந்து வாசஞ்செய்தான். பிறகு அவன்பின் வந்தோரில் ஒருவனான மாலோஜி தௌலதபாத்துக்குப் பக்கத்திலுள்ள எல்லோராவிற் குடிப் புகுந்தான்.

அக்காலத்தில் தௌலதபாத் நிஜாம் தேசத்தைச் சேர்ந்ததாக இருந்தது. அதற்கு லாகிஜாதர் என்பவர் கவர்னராக இருந்தார். அவரிடத்தில் மாலோஜி உத்தியோகத்திலமர்ந்தான். நிஜாம் நவாபிடத்து மாலோஜி எவ்வாறோ பெரும் மதிப்புவைத்திருந்ததினால் அவனுடைய இரண்டு புத்திரர்களுக்கும், ஷாஜி, ஷாரப்ஜி என்று நவாபின் நாமங்களைச் சூட்டினான். பிற்காலத்தில் ஷாஹாஜி என்னும் பெயர் பெற்ற ஷாஜியே சிவாஜியின் தந்தை.

ஷாஹாஜிக்கு நிஜாம் துரைத்தனத்தில் ஒரு உத்தியோகம் கிடைத்தது. ஹிஜ்ரா 1020-ல் நிஜாம் தேசத்துப் படை மால்வாவை அழித்தபொழுது, ஷாஹாஜியும் அவன் மாமனாகிய ஜாதராயும் நிஜாம் படையின் தலைவர்களாயிருந்தார்கள். மொகலாயச் சக்ரவர்த்தியாகிய ஜிஹாங்கீரும் அவ்விடத்துக்கு ஒரு படையை அனுப்பியிருந்தான்.

தன் ஆணைக்கடங்காதவர்களைத் தண்டிக்கும்பொருட்டு ஜிஹாங்கீர் ஷாஜிஹானைத் தெட்சிணத்துக்கு அனுப்பியபொழுது, ஜாதராய், ஷாஜிஹானை அடைய ஷாஜிஹான் தன் படையில் ஜாதராயை ஒரு 'பஞ்சஸாரி' ஆக்கினான். பஞ்சஸாரி என்றால் ஐயாயிரம் வீரர்களுக்குத்தலைமையான ஒருராணுவ உத்தியோகம். மொகலாயச் சேனையில் இது ஒரு பெரிய ஸ்தானமாக மதிக்கப்பட்டுவந்தது. ஆனால் 1040-ல் (A. H.) ஜாதராய் நிஜாம்ஷாவிடத்தில் திரும்பவும் சென்றபொழுது நிஜாம்ஷா ஜாதராய்க்கு மரணதண்டனை விதித்தான். அதனால் ஷாஹாஜி, ஷாஜிஹான் அரண்மனைக்குச் செல்ல அவனுக்கு அங்கே ஒரு பஞ்சஸாரி உத்தியோகம் கிடைத்தது. இதுவன்றி ஆன்பரிடமிருந்து தான்பிடித்தடக்கிய, நிஜாம்ஷாவின் தேசத்தில் உள்ள சில பாகங்களையும் ஷாஜிஹான் ஷாஹாஜிக்குக் கொடுத்தான். ஆனால் நிஜாம்ஷாவின் அரண்மனையிலிருந்த பாட்டிகான் 1041-ல் (A.H.) ஷாஜிஹானிடம் சென்றபொழுது, ஷாஹாஜியின் பாத்தியதையிலிருந்த பூமிகளை, ஷாஜிஹான் பாட்டிகானுக்குக் கொடுத்தான். இதனால் கோபமடைந்த ஷாஹாஜி, பிஜப்பூர் அதிபதியாகிய ஆடில்ஷாவோடு சேர்ந்துகொண்டு, ஒருபெரிய சேனையோடு தௌலதபாத்தைத் தாக்கினான். அன்றியும் நிஜாம்ஷாவை ஷாஜிஹான் சிறைப்படுத்தியபொழுது, ஷாஹாஜி ஒரு சிறுவனை, நிஜாம் தேசத்துக்கு அதிபதியாக சிங்காசனம் ஏற்றினான். ஷாஹாஜியின் இவ்விரு செயல்களாலும் கோபமடைந்த ஷாஜிஹான் அவனைத் தண்டிப்பதற்காக ஔரங்கசீபை ஒரு பெரும்படையோடு 1044-ல் (A. H.) அனுப்பினான் 1045-ல் அவன் ஷாஹாஜியின் 25 கோட்டைகளைப் பிடித்து, அவனை நிஜாம் தேசத்தைவிட்டுத் துரத்தினான்.

அப்பொழுது ஷாஹாஜி அடில்ஷாவிடம்சென்று ஒரு உத்தியோகம் பெற்றான். அடில்ஷா, பூனா, கோபம் எனனும் இரண்டு ஜில்லாக்களை ஷாஹாஜிக்குப் பழுசாகக் கொடுத்தான். இக்காலத்தில் சிவாஜி புருஷப் பருவமடைந்திருந்ததினால், அவ்விரண்டு ஜில்லாக்களையும் அவனே ஆளத்தொடங்கினான். பல இடங்களில் பல கோட்டைகளைக் கட்டி பதினையாயிரம வீரர்கள் சேர்ந்த ஒருபடையையும் சிவாஜி திரட்டினான். அந்த சந்தர்ப்பத்தில் அடில்ஷா நோயுற்றதினால் அவன் தேசத்தில் பல குழப்பங்கள் உண்டாக, சிவாஜி அத்தருணம் நோக்கி அடில்ஷாவின் ஆளுகையிலிருந்த கோக்கான் ஜில்லா முழுதையும் பிடித்துக்கொண்டான் இவ்வாறு பிரபலமடைந்த சிவாஜி, பக்கங்களிலுள்ள செல்வம் பொருந்திய பட்டணங்களையும், கிராமங்களையும் கொள்ளையடிக்கத் தலைப்பட்டான். சிவாஜியால் துன்பமடைந்த மாகாணத் தலைவர்களில் எவராவது அடில்ஷாவிடம முறையிட்டால், அவ்வாறு குறைகூறும் மாகாணத் தலைவனுடைய ஜில்லாவில் அவன் செலுத்தும் கப்பத்தை அதிகப்படுத்த இடமுண்டென்றும், தன்னிடம் விட்டால் அதிகக் கப்பம் செலுத்த ஆபத்தமாயிருப்பதாகவும், சிவாஜியும் அடில்ஷாவுக்கு விண்ணப்பம் அனுப்புவான். அடில்ஷாக்கவி

னாயிருந்ததினால், அவனுடைய உத்தியோகஸ்தர்களுக்கு சிவாஜி கைக்கூலி கொடுத்து, முறையிட்ட பல மாதாணத் தலைவர்களின் ஜில்லாக்களை அவன் பெற்றுக்கொண்டான். 1066-ல் (A. H.) அடில்ஷா மரணமடைந்தபொழுது அவனது வழித்தோன்றல் அல்லவென்று சந்தேகம் கொள்ளப்பட்ட ஒரு சிறுவனை அவனது அரண்மனை உத்தியோகஸ்தர்கள் ராஜாவாக்கினார்கள். அச்சிறுவன்தான் பிற்காலத்தில் ஆலி அடில்ஷா என விளங்கியவன். இவ்விஷயத்தை அறிந்த ஷாஜிஹான், பிஜப்பூரை முற்றுகைபோடும்படி ஔரங்கசீபுக்குக் கடிதம் அனுப்ப, ஔரங்கசீப் பிஜப்பூரை வளைந்துகொண்டான். கடைசியாக இந்த வில்லங்கத்திலிருந்து தப்பும்படி அடில்ஷா ஒரு கோடி ரூபாய் ஔரங்கசீபுக்குக் கைக்கூலி கொடுத்தான்.

இத்தருணத்தில் ஷாஜிஹான் பிணிவாய்ப் பட அவனது மக்களெல்லாம் சிம்மாசனத்தைக் கைப்பற்ற வீணே வழக்கிட்டனர். இடவே, ராஜ்யகாரியங்களெல்லாம் சீர்குலைந்தன. இதனாலே ஔரங்கசீப் பிஜப்பூர் முற்றுகையை விடும்படி நேர்ந்தது. இந்தத்தருணத்தை புத்திசாலியான சிவாஜி கைநழுவவிடாது நாற்பது கோட்டைகளைக் கட்டி, ஒரு பெரிய சேனையுந்திரட்டி, பிஜப்பூரின் மிகுதிப் பாகங்களையும் தன் கீழடக்கிக்கொண்டான். அடில்ஷா தக்க பருவமடைந்தபொழுது, சிவாஜியை அடக்கும்படி தன தளகர்த்தனை அப்சல்கானை அனுப்பினான். அப்சல்கான் சிவாஜியைப் போரில் புறங்காண, தந்திரசாலியான சிவாஜி தனிமையாகவந்தால் கீழடங்கிவிடுவதாக அப்சல்கானுக்குத் தூதனுப்பினான். அப்சல்கான் சிவாஜியைமுற்றிலும் நம்பி மெய்காவலருமின்றி சிவாஜியிடம்செல்ல சிவாஜி அவன் மேற்பாய்ந்து தன் கையில் அடக்கமாக வைத்திருந்த ஈட்டியால் குத்திக்கொன்றான்.

இவ்வாறு சிவாஜி அப்சல்கானைக்கொன்றதோடு நிற்காமல் ஔரங்கசீபுக்குக் கீழ்ப்பட்ட தேசங்களையும் கொள்ளையிடத் தொடங்கினான். ஔரங்கசீபுக்குப் பட்டம் கிடைத்தும் ராஜ்யகாரியங்கள் ஒழுங்காகவில்லை எனினும் ஹி-107[illegible]-ல் சிவாஜியை அடக்கும்படி ஷெயிஸ்றுக்கானை டெக்கிணத்துக்கு அனுப்பினான். ஷெயிஸ்றுக்கான் சிவாஜியின் கோட்டைகளையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகப் பிடித்து பூனாவைத் தன் தலைநகரியாக்கி சிவாஜியைப் பிடித்துக் கொண்டு வரும்படி தன்வீரர்களை நானாபக்கங்களிலும் போக்கினான். சிவாஜி மலைகாடுகளில் உருமாறி அலைந்து கொண்டிருந்தான். அங்ஙனம் சிலகாலங் கழிய ஹி-1073-ல் ஒருநாளிரவு திடீரென்று சிவாஜி ஷெயிஸ்றுக்கானோடு போர்தொடுத்தான். ஷெயிஸ்றுக்கானது அஜாக்கிரதையினால் தளகர்த்தஸ்தானம முனிஜாம் என்ற ராஜகுமாரன் கையிலாகும்படி நேர்ந்தது.

இத்தருணத்தில் சிவாஜி மாறியாடத்தொடங்கினான். மெக்காவுக்குப் போகும் மகமதியப்பக்தர்களின் கப்பல்களை சிவாஜி கொள்ளையடிக்கத் துணிந்தான். உடனே ஔரங்கசீப் ஜெயசிங் மகாராஜாவையும் தாலர்கானையும் சிவாஜிமேல் அனுப்ப, அவ்விரு தலைவர்களும் சிவாஜியின் நாடனைத்தையும் சூறையாடி அவனது ஆட்டபாட்டங்களையெல்லாம் அடக்கினர். கடைசியாகத் தனக்கு மன்னிப்புக் கொடுக்கும்படி சிவாஜி வேண்டினான். ஆனால் ஜெயசிங் மகாராஜாவுக்கு அவனுடைய வார்த்தைகளில் எள்ளளவும் நம்பிக்கையில்லாததினால் சிவாஜியின் குடும்பத்தார் வசித்துவந்த புரந்தர் கோட்டையையும் தாக்கினான். இனி வேறு உய்யும்வகை இல்லையென உணர்ந்த சிவாஜி, காவலருமின்றி நிராயுதபாணியாய் கோட்டையை விட்டு வந்து தன் கீழ்ப்படிதலை ஜெயசிங் மகாராஜாவுக்குத் தெரிவிக்கும்படி சிலபிராமணர்களை ஏவினான். சிவாஜி தனக்குக் கீழடங்கின விஷயத்தை சந்தேகமற விசாரித்து திருப்தியடைந்த பின்னர், தன் கூடாரத்துக்கு அழைத்துக் கொண்டு வரும்படி ஜெயசிங் சம்மதித்தான். ஜெயசிங்கின் பிரேரணையால் ஔரங்கசீப் சிவாஜிக்கு மன்னிப்புக் கொடுத்து, அவனுடைய மகன் சாம்பஜிக்கு ஐயாயிரம் வீரர்களுக்குத் தலைமையான பஞ்சசாரி உத்தியோகமும் அளித்தான். உடனே தன் 25 கோட்டைகளில் 23 கோட்டைகளின் சாவிகளையும் சிவாஜி ஔரங்கசீபிடம் சமர்ப்பித்தான்.

ஹி-1076-ல் சிவாஜி ஆக்ராவுக்குச் சென்றான். அவன் பட்டணத்தை சமீபித்த பொழுது அவனை நல்வரவேற்பதற்காக ஜெயசிங்கின் மகன் ராமசிங்கையும் முகலிஸ்கானையும் ஔரங்கசீப் அனுப்பினான். அவர்கள் சிவாஜியையும் உடன் கொண்டு, சக்ரவர்த்தியின் சமூகத்தை யடைந்தவுடன் சிவாஜி ஔரங்கசீபை வணங்கி தன் கையுறையையும் சமர்ப்பித்தான். உடனே ஔரங்கசீப் தன் பஞ்சசாரி உத்தியோகஸ்தர்கள் வரிசையில் சிவாஜிக்கு ஒரு ஆசனத்தைக் காட்டினான். ஆனால் அதைவிட உயர்ந்த ஸ்தானம் கிடைக்குமென்று சிவாஜி மனப்பால் குடித்திருந்தான். ஆகவே

ஔரங்கசீப் அளித்த ஸ்தானம் அவனுக்குத் திருப்தியை அளிக்கவில்லை. தன் மூறைபாட்டை உடன்தானே அவன் ராமசிங்கிடம் மறைவாகச் சொன்னதுமன்றி, வயிறுவலியென்று பாசாங்குபண்ணித் தரையில் படுத்துக்கொண்டான். இதைக் கண்ணுற்ற ஔரங்கசீப், விடுதிக்குப் போகும்படி சிவாஜிக்குக் கட்டளையளித்தான்.

ஐரோப்பிய சரித்திராசிரியர்களின் அபிப்பிராயத்தில், ஔரங்கசீபினுடைய தவறுதல்களும் கொடுஞ் செயல்களும் இதுமுதற்றான் ஆரம்பமாகின்றன. எல்பின்ஸ்டன் என்பார் இவ்விஷயத்தைப் பற்றி மிகவும் ஆட்சேபகரமாக எழுதியிருக்கிறார். ஆனால் அவருடைய அபிப்பிராயங்கள் பாரபட்சமற்றனவல்ல. சில ஐரோப்பிய எழுத்தாளர்கள், ஔரங்கசீப், சிவாஜியை அவமதித்தான் என்று சொல்வதோடுமட்டுமில்லாமல், சிவாஜியை அவன் சிறைப்படுத்தினான் என்றுங் கூட சாதிக்கிறார்கள்.

ஆனால் இவ்விஷயத்தைப்பற்றி ஆராயத் தொடங்க, கீழ் வருமம்சங்களையும் கவனிக்கவேண்டும்.

1. சிவாஜியை மனப்பூர்வமாக அவமதிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் ஔரங்கசீப் அவ்வாறு அவனை வரவேற்றானா?

2. அவன் சிறைப்படுத்தப்பட்டானா?

3. ஔரங்கசீப் சிவாஜியை அதைவிடக் கண்ணியமாக நடத்தியிருந்தாலும், சிவாஜி எப்பொழுதும் இப்படிச்து நடந்திருப்பானா?

4. இவ்விஷயத்தைப்பற்றி எழுதியவர்களில் அதிகம் நம்பத்தக்கவர்கள் யார்?—ஐரோப்பியர்களா—மகமதியர்களா?

சிவாஜியை எதிர் சென்றழைக்கும்படி ராமசிங்கும், முகலிஸ்கானும் அனுப்பப்பட்டனர் என்று எல்லாச் சரித்திராசிரியர்களும் சம்மதிக்கிறார்கள். அவனுக்கு அளிக்கப்பட்ட ஸ்தானம் பஞ்சஸாரிஸ்தானந்தான். அந்த ஸ்தானம் மூன்றாவது ஸ்தானமென எல்பின்ஸ்டன் சொல்லுகிறார். ஆனால் ராஜா ஜெயசிங் என்ற பெரிய மனிதனுங் கூட ஒரு பஞ்சஸாரியாகவே இருந்தார் என்ற விஷயத்தை அவர் மறந்துவிட்டது பரிதபிக்கத்தக்கதே. சிவாஜியை வென்றதற்காகவே ஜெயசிங்குக்கு ஷ்ப்தஸாரிஸ்தானம் கொடுக்கப்பட்டது. பாசில்கான் என்ற முக்கிய மந்திரியும் பஞ்சஸாரியாகவே இருந்தார்.

சிவாஜி ஆக்ராவுக்கு வந்தது, தன்னால் ஜெயிக்கப்பட்ட ஒரு சத்துருவின் நிலையிலேயே ஆனாலும் தனது இரண்டு பெரிய உத்தியோகஸ்தர்களை சிவாஜிக்கு எதிர் சென்று அழைக்குமாறு ஔரங்கசீப் அனுப்பினான். அம்மட்டோ? ராஜா ஜயசிங்கின் ஸ்தானமாகிய பஞ்சஸாரிஸ்தானமும் பெற்றான். இதைவிட சிவாஜிக்கு என்னதான் எதிர்பார்க்க முடியும்? இந்தியாசக்ரவர்த்தியாகிய ஔரங்கசீப், சிவாஜியை உபசரிக்கும்படி சிம்மாசனத்தை விட்டு இறங்கினது ஒன்றுமட்டும் போதாதா?

இந்த சந்தர்ப்பத்தில் நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம் ஒன்றுண்டு. ராஜா ஜெயசிங் ஔரங்கசீபினிடம் சிவாஜியின் பொருட்டுச் செய்துகொண்ட சிபார்சை என்ன? ஔரங்கசீப் அதை ஒப்புகொண்டானா அல்லவா? ஜெயசிங்கின் சிபார்சையால் சிவாஜி தனக்குக் கிடைக்கும் என்று நம்பியிருந்தவைகளை ஔரங்கசீப் பூர்த்தி செய்தானா அல்லவா?

சிவாஜி அரண்மனையிலிருந்து அதிருப்தியோடுசென்ற பொழுது அதைப்பற்றிய பூரண விவரங்களை ஜெயசிங்குக்குத் தெரிவித்து அவனுடையமறு மொழிக்குத் தக்கவாறு மேல்வேண்டும் ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று ஔரங்கசீப் கட்டளையிட்டதாக, சமகாலத்தவரான எல்லா சரித்திராசிரியர்களும் சம்மதிக்கிறார்கள். சிவாஜியின் குற்றத்தை மன்னிக்க வேண்டுமென்று மட்டுந்தான் ஜெயசிங் மறுமொழி அனுப்பினான். அதனாலே சிவாஜியைக் கவனித்துக்கொள்ளும்படி வைத்திருந்த கொத்தவால் அவ்வேலையினின்றும் நீக்கப்பட்டான்.

சிவாஜியின் புத்திரனை சாம்பஜிக்குக் கொடுத்திருந்த ஸ்தானத்தைவிட உயர்வான ஒரு ஸ்தானம் சிவாஜிக்குக் கொடுத்திருக்க வேண்டுமென்று காபிக்கான் என்பவன் சொல்லுகிறான். இதுமொகலாயச் சக்ரவர்த்திகளின் அரண்மனை வழக்கத்துக்கு விருத்தமானது. தகப்பனும் மகனும் ஒரே ஸ்தானத்தை உடைத்தாயிருந்ததாகப் பல திருஷ்டாந்தங்கள் காட்டலாம். அன்றியும் பஞ்சஸாரியைவிட ஒரு உயர்ந்த ஸ்தானத்தை ராஜசமூகத்துக்கு ஒருவன் வந்த, முதன்முறையிலேயே கொடுக்கவும் முடியாது. உயர்ந்த ஸ்தானங்களெல்லாம் காலக்கிரமதநிலை கொடுக்கப்படும். அங்ஙனம் கொடுக்கப்படுவதும் ஒருவனது பதவியை உயர்த்துவதற்கான தருணம் நேரும்பொழுது தான். இந்தப் பொதுவிதியை சிவாஜிக்காக மறுக்கமுடியுமா?

சிவாஜியை மதிப்பாக நடத்தியிருந்தால் அவன் ஜீவிதகாலம் முழுதும் கீழடங்கியே இருந்திருப்பான் என்று சில ஐரோப்பியர்கள் கூறும் வாதம் சரித்திரீக உண்மைக்கு முற்றும் எதிராகவே இருக்கின்றது. சிவாஜி தன் ஜீவிதகாலம் முழுமையிலும் எப்பொழுதாவது தான் உரைத்தவார்த்தையைக் காப்பாற்றினுண்டா? அப்சல்கானை வஞ்சனையாக் கொன்றவனும், பணப்பயித்தியத்தினல் நாடுநகரங்களைச் சூறையாடினவனுமான சிவாஜியினிடம் அத்தகைய உயர்வான குணத்தை யாருக்காவது எதிர்பார்க்கமுடியுமா?

மேலே கூறிய விஷயங்களினல், மகாராஷ்டிரர்கள் மொகலாயர் ஆணைக்கடங்காது எழும்படி செய்தது ஔரங்கசீப் அல்லவென்றும், ஷாஜிஹானுடைய அரசாட்சிக் காலத்தில் மகாராஷ்டிரர் மிகவும் குழப்பங்கள் செய்ய அவர்களை அடக்கும் நிமித்தம் ஷாஜிஹானே தெட்சிணத்துக்குச் செல்லும்படி நேர்ந்ததென்றும், ஔரங்கசீபின் படையால் சிவாஜி எல்லா வலியும் இழந்ததனல் மெய்காவலருமின்றி நிராயுதபாணியாய் ராஜாஜெயசிங்கிடம் சரணமடைந்தானென்றும், ஔரங்கசீப் சிவாஜியை வரவேற்றமுறையானது அவனது பதவிக்கு ஒருவாறேனும் தாழ்ந்ததல்லவென்றும், சரித்திரவிவகாரமுறையில் ஆராய்ச்சி செய்து முடிவு செய்துவிட்டோம். இனி, சிவாஜியின் ஜீவிதகாலமுழுதும் ஔரங்கசீபின் சத்துருவாயிருக்கும்படிக்கும், சிவாஜியின் சந்ததிகள் மொகலாய மகாராஜ்யத்தைச் சின்னபின்னப்படுத்தும்படிக்கும், சிவாஜி தன் பூர்வ பலத்தை அடைந்தானு என்றுமட்டுமே நாம் முடிவு செய்யவேண்டியதாக உண்டு.

மகாராஷ்டிரர்களின் ஆக்கிரமணத்தினல் வருத்தமடைந்த ஔரங்கசீப், தெட்சிணத்திலுள்ள ஆறு ஜில்லாக்களின் வருஷ வருமானத்தின் நான்கிலொருபாகத்தை அவர்களுக்குக் கொடுக்க உடன்பட்டதாக எல்லாச் சரித்திராசிரியர்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். எல்பின்ஸ்டன் இவ்விஷயத்தைச் சொல்லவுங் கூட சந்தேகப்படுகிறா. . ஆயினும் ராஜாஜெஸ்வான்றசிங், முனிசாம் ராஜகுமாரன் இவர்களின் பிரேரணையால், தான் ஒருபொழுதும் எதிர்பாராத நிபந்தனைகளின்பேரில் சிவாஜி சமாதான உடம்படிக்கை செய்துகொண்டானென்று அவர் எழுதியிருக்கிறார். அந்த உடம்படிக்கைப்படி, அவன் தேசத்தில் மிகுதிப்பாகமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டன; பிறதேசத்திலும் கொஞ்சம் பூமி அவனுக்குக் கொடுக்கப்பட்டது; அவனுடைய ராஜா என்ற கௌரவப்பட்டமும் ஒப்புக்கொள்ளப்பட்டது; அவனது குற்றங்களெல்லாம் மறக்கவும் பட்டன.

உண்மையான விஷயங்களை ஐரோப்பிய சரித்திராசியர்கள் எவ்வாறு தப்பாக்கியிருக்கிறார்கள் என்று இப்பொழுது காட்டத்தொடங்குகிறோம். உண்மை எப்படியென்றால் சிவாஜி தெட்சிணத்துக்கு ஓடிய பொழுது, ஔரங்கசீப் அரசாட்சியின் பத்தாவது ஆண்டில் முனிசாம் ராஜகுமாரன், ராஜா ஜெஸ்வான்றசிங்கோடு கூட்டுத்தளகர்த்தனக நியமனம் பெற்றான். உடனே சிவாஜி, தன மகனை ஜெஸ்வான்றசிங்கிடம் அனுப்பி, அவனுக்கு சைனியத்தில் ஒரு உத்தியோகம் கொடுக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். ஜெஸ்வான்றசிங் அவன் விண்ணப்பத்தை ஒப்புக்கொண்டான். உடனே சாம்பஜிக்கு பஞ்சஸாரிஸதானமும், பிறர்தேசத்தில் கொஞ்சம் ஜாகீரும் கொடுக்கப்பட்டன, மாவிர் உல்-உமாரு-தொகுதி II பக்கம் 348-ல் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது. இதிலிருந்து தான் எல்பின்ஸ்டன் தனது விருத்தாந்தத்தை உருப்படுத்தியிருக்கிறார். சாம்பஜிக்கு ராஜா என்ற ஸ்தானமும் கொடுக்கப்பட்டது. ஆனல் அந்த ஸ்தானம் சிவாஜிக்குத்தான் கொடுக்கப்பட்டதென்று எல்பின்ஸ்டன் சொல்லுகிறார். எல்லா உத்தியோகஸ்தர்களுக்கும் கொடுக்கிற முறைப்படி சாம்பஜிக்கும் கொஞ்சம் பூமி கொடுக்கப்பட்டது. எல்பின்ஸ்டன் அதை வேறு விதமாக மாற்றிவிட்டார். சிவாஜிக்குக் கொடுக்கப்பட்ட பூமிகளுக்கு அவன்தான் உண்மையான உரிமையுடையவன் என்று ஒப்புக்கொண்டபிறகே ஔரங்கசீப் கொடுத்தார் என்று அவர் சொல்லுகிறார்.

இனி சௌத் என்ற இறையைப்பற்றிக் கவனிப்போம். முற்காலத்தில் இறை வசூல் செய்தவர்கள் தேசமுகா (Desmukhs) என்ற உத்தியோகஸ்தர்கள். அவர்களுக்குப் பிரதிபலனக மொத்தவருமானத்தில் பத்திலொருபாகம் அளிக்கப்பட்டது. முதலில் ஔரங்கசீப் சிவாஜிக்கும் அவன் சந்ததிக்கும் இவ்விறை வசூல் செய்ய அதிகாரம் கொடுத்தான் என்பதில் எள்ளளவும் உண்மையில்லை. இரண்டாவதாக, அப்படி அல்லவென்று மறுத்தாலுங்கூட, தெட்சிணத்தின் வருமானத்தில் நான்கிலொரு பாகத்தை சிவாஜிக்கும் அவன் சந்ததிகளுக்கும் ஔரங்கசீப் கொடுத்தது, தன் குடிகளுக்கு ஒரு அரசன் கொடுத்த முறைமையிலலாது, ஐரோப்பிய சரித்திராசிரியர்கள் எண்ணுகிறபடி, சிவாஜியால் நெருக்கப்பட்டுக் கொடுத்ததல்ல.

ஆனாலும் இவ்விஷயம் இத்துடன் முடிவுபெற வில்லை. ஔரங்கசீப் சிவாஜிக்கு ஏதேனும் தொகை கொடுப்பதாகச் சம்மதிக்கவில்லை யென்று வைத்துக் கொண்டாலும், மகாராஷ்டிரர்கள் மொகலாய மகாராஜ்யத்தின் சத்தையெல்லாம் வாங்கிவிட்டார்கள் என்று சிலர் மறுக்கக்கூடும்.

எலிபின்ஸ்டன் பின்வருமாறு எழுதுகிறார் :— "மகராஷ்டிரர் ஔரங்கசீபின் படையை நெருங்கி வர வர, அவனுடைய கஷ்டங்கள் அதிகரித்தன. சில வேளை அவர்கள் மொகலாயப் படைகளின் உணவுப் பொருள்களைக் கொள்ளையடித்துக்கொண்டு போவார்கள். அவனது படைகளை அவர்கள் எப்பொழுதும் சூழ்ந்துகொண்டே இருந்ததனால், பாளயத்தைவிட்டுத் தனிமையாகப்போவதற்கும் யாவரும் அஞ்சுவார்கள். அவர்கள் தங்களைத்தாக்கி, தங்கள் சக்ரவர்த்தியையும் கொன்றுவிடுவார்கள் என்று எப்பொழுதும் படை வீரர்கள் அஞ்சிக்கொண்டே இருந்தார்கள்."

இவ்விஷயங்களைப்பற்றி முடிவு கூறுமுன் சிவாஜியைப்பற்றியும் அவன் சந்ததிகளைப்பற்றியும் சிறிது சொல்லவேண்டியதுண்டு.

சிவாஜி தெட்சிணத்துக்கு வந்தவுடன், கோல்கண்டா தேசத்தாரின் உதவியோடு, ஔரங்கசீபின் நாட்டில் சூறையாடத் தொடங்கினான். அடிக்கடி அவனை அடக்குவதற்காக ஔரங்கசீப் படைகளை அனுப்பிக்கொண்டே இருந்தான். முடிவில் ஔரங்கசீபின் அரசாட்சியின் 23-வது வருஷத்தில் சிவாஜி திடீரென்று இறந்தான். உடனே சாம்பஜி ராஜாவாகி, பர்ஹாம்பூரைத் தாக்கிக் கொள்ளைசெய்து, பட்டினத்தையும் நெருப்புவைத்து நாசஞ்செய்தான். அந்தப் பட்டிணத்தில் எப்பொழுதும் சண்டையும் கொள்ளையும் நடப்பது வழக்கமாய் விட்டபடியால், வெள்ளிக்கிழமைதோறும் பிரார்த்தனை நடத்தவும் முடியாமலிருக்கிறதென்று மல்விகள் சக்ரவர்த்திக்கு மனு அனுப்பினார்கள்.

இதுவரையிலும் மகாராஷ்டிரர்களின் கொள்ளைகளைப்பற்றி ஔரங்கசீப் கவனித்தவனல்ல. இந்த மனுவினால் அவன் மனம் புண்பட்டது. ஆகவே தன் அரசாட்சியின் 25-வது வருஷத்தில் அவன் தெட்சிணத்துக்குப் புறப்பட்டான். ஔரங்கபாதை அடைந்தவுடன், மியூசாம ராஜகுமாரனை மகாராஷ்டிரர்களை அடக்கும்படி அனுப்பினான். அவன் தன் வழியருகுள்ள நாடுகளையெல்லாம் வென்றுகொண்டே போனான். அவர்களது சுகாதாரத்துக்குப் பொருந்தாத அந்நாட்டின் சீதோஷ்ண நிலையினால் படைகள் பதினாயிரக்கணக்காக மாண்டுபோக, ஔரங்கசீப் அவனைத் திரும்ப அழைத்தான். பிஜப்பூர் ஐதராபாத் அரசர்கள் சாம்பஜிக்குத் துணைவர்களாயிருந்ததனால், ஔரங்கசீப் ஐதராபாதைத் தாக்கித் தன் நாட்டோடு சேர்த்துக் கொண்டான்.

இதற்கப்பால் தன் அரசாட்சியின் 34-வது வருஷத்தில் சாம்பஜியை அடக்குவதற்காக முக்ராப்கானை ஔரங்கசீப் அனுப்பினான். வீரனை முக்ராப்கான் சாம்பஜியை அவனுடைய குடும்பத்தோடு பிடித்து சிறைப்படுத்தினான். சாம்பஜி மிகக் கொடிய துஷ்டனானதால், அவன் பிடிபட்டதைப்பற்றி இந்துக்களும் மகமதியர்களும் ஒருப்போல மகிழ்ச்சியடைந்தார்கள். கன்னெஞ்சனாகிய இந்தக் கொள்ளைக்காரனைச் சிறைப்படுத்திக்கொண்டு போவதைப் பார்ப்பதற்காக சீமான்கள்வீட்டுப் பெண்களுங்கூட, தங்கள் குலாசாரத்துக்கு மாறாக, வெளிவந்தார்களாம்.

முடிவில், சாம்பஜியை ஔரங்கசீப் முன் கொண்டு போகப்பட்டபொழுது, சாம்பஜி சக்ரவர்த்தியை வாயில் வந்தபடியெல்லாம் திட்டினானம். உடனே அவனுடைய நாக்கை அறுக்கும்படி சக்ரவர்த்தி கட்டளையிட்டார். பிறகு அவனைக் கொல்லும்படி விதியும் பிறந்தது. ஔரங்கசீபின் 50 வருஷத்திய அரசாட்சிக்காலத்தில் இது ஒன்றுதான் அவன் செய்த கொடியதண்டனை. அதற்கு முன்னாவது பின்னாவது இது போன்ற ஒரு அமானுஷ்ய மரணத்தீர்ப்பை அவன் செய்ததே இல்லை.

சாம்பஜியின் மனைவியையும் புத்திரன் சாகுவையும் ஔரங்கசீப் மிகக் கருணையோடும் கௌரவத்தோடும் பாதுகாத்துவந்தான். 7 அல்லது 8 வயதுச் சிறுவனாயிருந்த சாகுவுக்கு நூப்தசாரி உத்தியோகம் கொடுத்து அவனை எப்பொழுதும் தன் பக்கத்திலேயே வைத்துக்கொண்டான். இவ்வாறு ஔரங்கசீப் காட்டிய கருணை இணையற்றதென்று சொல்லவேண்டியதில்லையே.

ஹிந்துக்கள் சிறையிலிருக்கும்பொழுது சமைத்த உணவை உட்கொள்ளும் வழக்கமில்லை ஆகையால் சாகு

வென்பவன் பழங்களையும் பலகாரங்களையுமே தின்று கொண்டிருந்தான். இதை ஒளரங்கசீப் அறிந்து, சாகு ஒரு கைதி அல்லவென்றும் அவன் வீட்டிலே இருப்பதுபோலவெண்ணி சமைத்த உணவை உண்ணலாமென்றும், சாகுவினிடம் சொன்னான்.

ஒளரங்கசீப் தீர்க்காலோசனையற்ற ஒரு பிடிவாதக்காரன் என்று அவனுடைய சத்துருக்கள் சொல்லுகிறார்கள். இது ஒரு ஆலோசனையற்ற பிடிவாதமானால், இதற்காக அநேகம் நற்குணங்களை இழப்பதும் நன்மையானதே. தன் ஜீவிதகாலமுழுதும் ஒளரங்கசீப் சாகுவை மிகத் தயவாகவே நடத்திவந்தான். ஒளரங்கசீப் இறந்தபின்னர், சாகு மொகலாயர் ஆணைக் கடங்காது நடக்கத் துணிந்தானாயினும், தன்னையும் தாயையும் அன்போடும் ஆதரவோடும் நடத்திய ஒளரங்கசீபை அவன் மறக்கவில்லை. ஆகையால் விடுதலையடைந்தவுடன் முதன் முதல் ஒளரங்கசீபின் சமாதியைத் தரிசித்தபின்தான் மறுவேலை செய்யத்தொடங்கினான்.

சாம்பஜி இறந்த பிறகு அவன் தம்பியாகிய ராமராஜன பட்டத்துக்கு வந்து சக்ரவர்த்தியின் படைகளைப்பலமுறை முறியடித்தான். அவன் தலைகர்த்தனாகிய சாந்தன் தாந்தன் என்னும் இரண்டு வீரர்கள் பத்தல்லது பன்னிரண்டாயிரம் ஆட்களோடு எப்பொழுதும் சக்ரவர்த்தியின் நாடுகளைக் கொள்ளையடித்துக் கொண்டே இருந்தார்கள். இவ்விஷயத்தை ஒளரங்கசீபின் விரோதிகள் பலவாறாக வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். ஆனால் சாந்தன் ஹி—1106-ல் கொல்லபட்டான். ராமராஜன் ஹி—1110-ல் இறந்தான். அவன் மனைவியான தாராபாய் சேனைகளுக்கெல்லாம் தலைவியாகி, தன் நாயகனைப்போலவே அநேககாலம் கொள்ளை நடத்திக் கொண்டிருந்தாள்.

இப்பொழுது மகாராஷ்டிரர்களை வேரறுக்கவேண்டும் என்று ஒளரங்கசீப் எண்ணினான். இதற்காக அவர்கள் வசித்துவந்த கோட்டை கொத்தளங்களை எல்லாம் முதலில் நாசஞ்செய்ய வேண்டியது மிகவும் அவசியமாயிற்று. மனிதர்களுக்குப் போகமுடியாத இடங்களில் அந்தக் கோட்டைகள் கட்டப்பட்டிருந்ததினால் அவைகளைப் பிடிப்பது அவ்வளவு எளிதான வேலையல்ல. ஒளரங்கசீப் 82-வது வயதை அடைந்திருந்தும் தானே படைகளை நடத்தி அக்கோட்டைகளையெல்லாம் ஒவ்வொன்றாகப் பிடித்தான். தன் ஆளுகையின் 49 வது வருஷத்தில் நாடு சண்டை சச்சரவின்றி சமாதானமாயிருப்பதால் யாவரும் தங்கள் வீட்டில் வந்து சுகமாக வாழலாமென்று ஒளரங்கசீப் விளம்பரம் செய்தான்.

மகாராஷ்டிரர் சௌரியமெல்லாம் நாசமாயிற்று. ஆகையால் அவர்கள் கொள்ளையடிப்பதையே தமது ஜீவிதத்தொழிலாகக் கொண்டனர். இவ்வாறு நேர்ந்தது ஒரு புதுமையுமல்ல. புதிதாய்ப்பிடிக்கப்பட்ட நாடுகளில் இத்தகைய சம்பவங்கள் உண்டாவது ஸகஜந்தான்.

ஆனால் பலவித துவேஷங்களை மனதில் வைத்துக் கொண்டு அநேக ஐரோப்பிய சரித்திராசிரியர்கள் இந்தக்கொள்ளைகளையெல்லாம் மிகவும் வெறுக்கத்தக்க விதமாய் வியாக்கியானம் செய்திருப்பது மனவருத்தத்தைத் தருகின்றது. மொகலாய மகாராஜ்யத்தை ஒரு பிரேதமாகவும் அதை மகாராஷ்டிரர்கள் பிடுங்கித் தின்பதாகவும் அவர்கள் உவமித்துக்கூறுகிறார்கள்

எல்பின்ஸ்டன் சரித்திரத்திலிருந்து சிறிதுமேலே எடுத்துக்காட்டிய ஒரு திருஷ்டாந்தத்தினால் மகாராஷ்டிரர்கள் எவ்வளவு சக்தியுடையவர்கள் என்றும் அவர்கள் ஒளரங்கசீபை எவ்வளவு துன்பப்படுத்தினார்கள் என்றும் ஒருவாறு அறியலாம். மகாராஷ்டிரர்களைக் கேவலம் கொள்ளைக்காரர்கள் என்று சொல்லலாமேயன்றி வீரர்கள் என்று சொல்லமுடியாது. இப்பொழுது இந்தியாவின் வடமேற்கெல்லையில் வசிக்கும் காட்டாளச்சாதியார் ஆங்கிலேய துரைத்தனத்தாரைப் பலவாறாக ஹிம்ஸித்துவருகிறார்கள். அதனாலே அவர்களைப் பலமுடையவர்கள் என்றும் ஆங்கிலேயர் பலங்குறைந்தவர்கள் என்றும் சொல்லலாமா?

அன்றியும் ஒரு சக்தியுடைய ஜாதியாரைத் திடீரென்று அடக்கிவிட முடியாது. பேபர் உதயப்பூர் ராணாவைத் தோற்கடித்தானாயினும் அக்பர் காலத்தில் ராணா முன்போல பலமுடையவனாகவே இருந்தான். அக்பரும் மகாராணாவைத் தோற்கடித்து நாட்டைவிட்டு ஓட்டினான். ஆனால் ஜிஹாங்கீர் காலத்தில் உதயப்பூர் முன்போலவே சக்தியுடையதாயிருந்தது, ஷாஜிஹான் காலத்திலும் உதயப்பூர்ராணா மேலெழும்பி அநேக இடையூறுகள் செய்துகொண்டிருந்தான். ஒளரங்கசீப் தொடர்ச்சியாய் எதிர்த்துப் போர் புரிந்ததனால் மட்டுமே உதயப்பூர் மொகலாயருக்கு முற்றும்கீழடங்கியது.

அதுபோலவே ஷாஜிஹான் காலத்தில் மகாராஷ்டிரர்கள் பலமுடையவர்களாகி, தெட்சிணத்தில் சென்னை வரையிலும் பரவி, அங்கங்கே தாக்க முடியாத பல கோட்டைகளையும் கட்டினார்கள். இதுவன்றியும் அவர்கள் நடுப்பிராயத்தை யடைந்த ஒரு புது ஜாதியார். இந்த ஸந்தர்ப்பத்தில்தான் ஔரங்கசீப் இவர்களை எதிர்க்க நேர்ந்தது. அதனால் சிவாஜி ஔரங்கசீபுக்குக் கீழ்ப்படிந்து இறந்தான். சாம்பஜி கொல்லப்பட்டான். ராமாஜன் காட்டிலலைந்து இறந்தான். சங்கனும் போரில் மடிந்தான். மகாராஷ்டிரர் கோட்டைகள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக மொகலாயர் வசமாயின. வீரர்கள் எல்லாம் தோற்று இருந்த இடந்தெரியாது மறைந்தனர். நாடெல்லாம் சமாதானம் அடைந்தது.

அத்தருணத்தில் ஔரங்கசீப் இறந்தான். ஆகவே மீதமாக நின்ற மகாராஷ்டிரக் கொள்ளைக்காரர்களை அடக்கும் பொறுப்பு ஔரங்கசீபின் பின் வந்தோருக்காயிற்று. துரதிர்ஷ்டவசமாய் பலஹீனனான முஹம்மதுஷா டெல்லி அரசனாகநேர்ந்ததனால் அவனுக்கு மகாராஷ்டிரரை அடக்க சக்தியில்லாதாயிற்று. அவன் குற்றத்தை, கருணையற்றவர்களாகிய சரித்திராசிரியர்கள் ஔரங்கசீப் தலைமேல் ஏற்றிவிட்டார்கள். அது ஒரு பாதகம் அல்லவா?

(Adapted from the Educational Review, Madras.)

பூந்தோட்டம்.

ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வீடுகளில் காய்கறி முதலியவற்றைத் தரும் செடிகளைப் பெரிதும் பயிரிடாமல் புஷ்பங்களைத் தரும் செடிகளையே நட்டுப் பயிர் செய்கிறார்கள். கோயில் அதிகாரிகளும் நந்தவனம் வைக்கின்றனர். கவர்ன்மெண்டாரும் உய்யானம் வைத்து ஆயிரக் கணக்கான ரூபாக்களைச் செலவிடுகின்றனர். நமது பள்ளிகளிலும் சிறியதோட்டம் இருக்கவேண்டும்; அதில் பல புஷ்பச் செடிகள் நட்டுப் பயிராக்க வேண்டும் என்கின்றனர். இவற்றிற்கெல்லாம் ஏதாவது காரணம் இருக்கவேண்டும் அல்லவா? "சொல்லத்தக்க காரணம் என்ன இருக்கும்? புஷ்பம் ஓர் இந்திரியத்தைத் தானே திருப்தி செய்கிறது? மூக்கினால் முகர்வதற்குத்தானே பலன்படுகிறது? சில நிமிஷம் நறுமணத்தைக் கொடுத்துப் பிறகு வாடிவதங்கும் மலர் காய்கறிகளைவிட உயர்ந்ததோ?" என்று பல கேள்விகள் கேட்பீர்கள். இப்படிக் கேட்கும் நீங்கள் ஒரு நிமிஷம், கல்விமான்களைச் சென்று காணும் காலத்திலும் செல்வவான்களிடம் போகும் போதும் பூச்செண்டு பூமாலை முதலியவற்றை ஏன் கொடுத்துக் காணவேண்டுமென்றொரு கேள்வி உங்களையே கேட்டுக்கொள்வீர்களாகில், அதற்குப் பதில் உடனே வெளிவரும். மலர்கள் மனச் சோர்வையும் துன்பையும் நீக்கி ஆநந்தத்தைப் பெருக்குவன அல்லவா? ஒருவனுக்குத் துன்பம் வந்த காலத்திலும், கல்விமுதலிய ஆராய்ச்சியால் மனம் சோர்வு அடைந்த காலத்திலும், நந்தவனம், உய்யானம் முதலிய இடங்களிற் சென்று மெல்ல உலாவிக்கொண்டு பற்பல பூக்களைக் காணில் அத்துன்பம் முதலியன நீங்கி ஆநந்தப் பெருக்கம் உண்டாகும் அல்லவா? இப்படி ஆனந்தத்தை உண்டுபண்ணுகிற காரணத்தை அறிந்தே ... விமான்களையும் செல்வவான்களையும் காணச் செல்பவர், 'உம்முடைய உள்ளமாகிய கமலம் மலரட்டும்' என்று சொல்பவர்போல, கையில் மலர்ந்த மலர்களை எடுத்துச் செல்கின்றனர்.

பூக்கள் மூக்கை மாத்திரம் மகிழ்விக்கும் என்று எண்ணுதல் வேண்டாம். அவை பஞ்சேந்திரியங்களையுமே மகிழ்விக்கும். பஞ்சேந்திரியங்களையும் மகிழ்விக்கும் என்றீரே, பூக்கள் சரீரத்தை எப்படி மகிழ்விக்கும் என்று கேட்பீர்கள்; நல்ல மலரில் படிந்து காற்று வருமேயானால் அது உடம்பிற்கு எவ்விதமாக இருக்கும் என்பதை யோசியுங்கள். அம்மலர்களில் உள்ள வண்டுகளின் ரீங்காரம் செவிக்கு இனிமையைத் தரவில்லையா? அம்மலர்களில் உள்ள தேன் நாவிற்கு இனிக்கவில்லையா? மலர்களை முகரும் காலத்து மூக்கு அடையும் சுகத்தைவிடக் குறைவான சுகத்தையோ கண்கள் அடைகின்றன? செடிகளிலும் மரங்களிலும் மலர்கள் நிறையப் பூத்திருக்கும் காலத்து அவைகளைக் காணும் கண்கள் குறைந்த சுகத்தை அநுபவிக்கின்றன என்று சொல்லலாமோ? சொல்லுதல் ஆகாது; கண்கள் நல்ல சுகத்தையே அநுபவிக்கின்றன.

இப்படிச் சொன்ன விதத்தால் மலர்கள் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து பொறிகளையும் திருப்தி செய்கின்றன என்பதை அறிகின்றோம். அப்படி ஐம்பொறிகளையும் திருப்தி செய்வதை அறிந்தே நமது பெரியோர் பூஞ்செடிகளை எங்கும் நட்டுப்

பயிராக்கினர். நம்மையும் பயிர் செய்யும்படி கூறினர். நம்மைப் பயிர் செய்யும்படி கூறியதில் வேறொரு விசேஷமும் உண்டு. அதாவது பிறருடைய நந்தவன முதலிய காட்சியினும் தானே வைத்துப் பயிர்செய்த பூஞ்செடிகள் சிலவற்றின் காட்சி, மிக இனிமையும் அழகும் உடையதாகும். இஃது உண்மையோ என்று சந்தேகிப்பவர்,

"தெண்ணீ ரடுபுற்கை யாயினும் தாள் தந்த
துண்ணலி னூங்கினிய தில்"

என்னும் குறளைக்கூர்ந்து கவனிப்பாராயின் சந்தேகிக்கமாட்டார் என்றே திடமாகச் சொல்லலாம்.

இனி இப்பூக்கள் கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என நான்கு வகைப்படும். (1) அவற்றுள், கோட்டுப்பூக்களாவன:—கோங்கு, மந்தாரை, மகிழ், மாதுளை, பலா, கொன்றை, புன்னை, பவள மல்லிகை முதலியன;

(2) கொடிப்பூக்களாவன:—மல்லிகை, முல்லை, சம்பங்கி, இருவாட்சி, குலாமல்லி (ரோஜா) முதலியன;

(3) நீர்ப்பூக்களாவன:—வெண்டாமரை, செந்தாமரை, வெண்ணெய்தல், செந்நெய்தல் முதலியன;

(4) நிலப்பூக்களாவன:—தும்பை, வெட்டிவேர், மரு, மருக்கொழுந்து, துளசி, விஷ்ணுகாந்தி, சூரிய காந்தி, முதலியன.

இந்த நான்குவிதமான பூக்களும் சௌரகம் (=சூரியனைப் பூப்பன) சாந்திரிகம் (=சந்திரனைப் பூப்பன) என்னும் இரண்டில் அடங்கிவிடும். தாமரை, ஒரிதழ்த் தாமரை, ஞாயிறுதிரும்பி முதலியன சூரியனைப்பூப்பன. அல்லி, நெய்தல், மல்லிகை, முல்லை முதலியன சந்திரனைப்பூப்பன.

இவ்வித பாகுபாடுள்ள பூஞ்செடிகளை நமது பாடசாலைத் தோட்டங்களில் எங்ஙனம் வைத்து வளர்த்தால் அவைகள் செழிப்புற வளரும் என்பதை ஆராயுமுன் வேறொரு விஷயம் சொல்ல விரும்புகிறோம். அது இவ்விடத்தில் இடம் பெற வேண்டிய அவசியம் இல்லையானாலும், அதைத் தெரிந்து வைப்பது சிலாக்கியமெனக் காணப்படுவதால், இவ்விடத்திற் கூறுகிறோம். மலாதரும் மரங்களுள்ளே சில மகளிரால் மலரும் மரங்களும் உண்டென்று பெரியோர் கூறுகின்றனர், அவை வருமாறு:—

1. மகிழமரம் சுவைக்க மலரும். 2. எழிலைம் பாலை நட்புற மலரும். 3. பாதிரி மரம் சிரிக்க மலரும். 4. முல்லைக்கொடி நகைக்க மலரும். 5. புன்னைமரம் ஆட மலரும். 6. குராமரம் அணைக்க மலரும். 7. அசோகமரம் உதைக்க மலரும். 8. குருக்கத்திமரம் பாட மலரும். 9. மாமரம் பார்க்க மலரும். 10. சண்பகமரம் நிழல் பட மலரும்.

(பேராசிரியன்)

பற்பல குறிப்புகள்.

பிரான்ஸ், ஜெர்மனி இந்த இரண்டுநாடுகளையும்விட ருஷியாராஜ்யம் 20-பங்கு பெரிதானது. ருஷியாவின் ஜனத்தொகை 165,000,000, அதாவது ஜர்மனியைவிட 100,000,000 ஜனங்கள் அதிகமுண்டு.

* * *

அமேரிக்காவில் ஐக்கிய நாடுகளில் மோட்டார் வண்டிகள் உண்டாக்கமட்டும் 211—யந்திரசாலைகள் உண்டு. நமது நாட்டில் ஒன்றுவதுண்டா?

* * *

தற்கால யுத்தத்தில் எண்பது லட்சம் ஜனங்கள் நாசமடைந்திருக்கிறார்களாம். இதில் மிகுதிப்பாகமும் காயமடைந்து அங்கஹீனர் ஆனவர்களே.

* * *

நமது சக்ரவர்த்தியின் புத்திரரான வெயில்ஸ் ராஜகுமாரனுக்கு இப்போழுது வயது 23. அவருக்கு இதுவரையிலும் கலியாணமாகவில்லை. நமது ஜார்ஜ் சக்ரவர்த்தி 26-வது வயதில் விவாகம் செய்தார். அவர் பிதாவாகிய எட்வேர்ட் சக்ரவர்த்தி விவாகம் செய்தது 21-வது வயதில்.

ஜெப்பான் தேசத்திலும் அதன் ஆதீனத்திலிருக்கிற கொரியா, பார்மோஸா முதலிய இடங்களிலும் இப்பொழுது நன்செய்ப் பயிர் செய்கிற நிலங்களில் பருத்திப் பயிர் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். இந்தியாவுக்கு இதுகாறும் இங்கிலாந்திலிருந்து வந்து கொண்டிருந்த துணிவகைகளை இப்பொழுது ஜெப்பானியர் உண்டாக்கியனுப்பத் தலைப்பட்டிருக்கிறார்கள். இதை ஸ்திரப்படுத்துவதற்காகவே பருத்திக்கிருஷியின் ஆரம்பம் ஆய்வருகின்றது.

* * *

பிரான்சில் இருக்கிற யுத்தவீரர்களுக்கு இங்கிலாந்திலிருந்து வாரந்தோறும் ஒருகோடி எழுத்துகள் அனுப்பப்படுகின்றனவாம்.